ஓம் அகத்தியர் துணை

# தமிழைக்கற்றால் வரும் நன்மைகள்

பரமானந்த சதாசிவ சற்குரு

**தவத்திரு. ரெங்கராஜதேசிக சுவாமிகள்**

நிறுவனர்,

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**

ஓங்காரக்குடில், துறையூர் – 621 010, திருச்சி மாவட்டம்.

தொலைபேசி 04327–255684, 255184.

## நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூல் | : | தமிழைக்கற்றால் வரும் நன்மைகள் |
| முதற்பதிப்பு | : | 05–10–2003 – 27 ஆம் ஆண்டு திட்சைவிழா வெளியீடு |
| பக்கம் | : | 88 |

வெளியீடு

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில், துறையூர் –621 010,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

**தொலைபேசி**

குருநாதர் 04327–255684.
அலுவலகம் 255184, 255384.
Fax : 04327-255284.
Website : www.agathiar.org
e.mail : agathiartrust.in@agathiar.org

| | | |
|---|---|---|
| அச்சிட்டோர் | : | வாஞ்சி மறுதோன்றி அச்சகம், துறையூர்–621 010. 04327–243638. |

## ஒன்றே குலம் ஒருவனே தேவன்
## நாம் அனைவரும் அகத்தியர் குலம்
## நமது இறைவன் அகத்தீசன்

**ஓம் அகத்தீஸ்வரா!**

நான் கணக்கிலடங்கா பிறவிகள் எடுத்து அலுத்துவிட்டேன். இந்த ஜென்மத்தில் உன்பெருமையை உணர்ந்து கொண்டேன். உன்திருவடியைப் பற்றி பூஜித்தால் எனது பிறவி அற்றுவிடும் என்பதை உமது திருவருளால் அறிந்து கொண்டேன். எனவே, என் அகமும் புறமும் இருந்து, உன் திருவடியை உருகி தியானித்து ஜென்மத்தைக் கடைத்தேற்ற நீயே எனக்கு அருள் செய்ய வேண்டும். உன் திருவருள் துணைகொண்டுதான் உன் திருவடியைப் பற்றி பூஜிக்கமுடியும். நாயினும் கடையேனாகிய என்னையும் ஏற்று, இரட்சித்து அருளுமாறு உமது திருவடி பணிந்து வேண்டுகிறேன்.

உமது பெருமைக்குரிய திருவடியை **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்றறு ஒருமுறை சொன்னாலே உமது அன்புச் சீடர்களான ஒன்பது கோடி ஞானிகளின் ஆசி எனக்கு கிடைக்கும். எனவே, உமது நாமத்தை தொடர்ந்து சொல்லவும் ஒன்பது கோடி ஞானிகளின் ஆசியைப் பெறவும் எனக்கு உமது திருவருள் வேண்டும். இனி எனக்கு காலன் என்ற எமபயம் இல்லை என்று பெருமிதத்தோடு இருக்கிறேன். உமது திருவருளால் வெற்றியும் பெறுவேன் என்பது சத்தியம்.

நான்செய்த பாவம், கடவுள் எனக்கு கல்வி இல்லாமல் செய்துவிட்டார். **தமிழைக்கற்றால் வரும் நன்மைகள்** என்ற இந்த சிறிய நூலை நான் சொல்லச்சொல்ல அன்பர் இரா. மாதவன் அவர்கள் பல்வேறு வேலைப்பளுக்கு இடையில் பொறுமையுடன் எழுதி இந்த சிறிய நூலை தொகுத்துள்ளார். அவருக்கும், அவரது குடும்பத்தார்களுக்கும் எல்லாம்வல்ல அகத்தீசர் ஆசியும், அவர்

அன்புச்சீடர்களான நவகோடி சித்தர்களின் ஆசியும் அவருக்குக்கிட்ட ஆசான் அகத்தீசர் திருவடியை வேண்டுகின்றேன்.

தமிழைக்கற்றால் வரும் நன்மைள் என்ற இந்நூலுக்கு ஆசான் அகத்தீசரிடம் முன்னுரையும் அருளுரையும் சுவடிமூலம் அருள வேண்டும் என்று திருவடி பணிந்து கேட்டபொழுது, ஆசான் அகத்தீசர் மனம் மகிழ்ந்து தம் சுவடிமூலம் அருளிய அருட்கவிகளை இந்நூலுக்கு முன்னுரையாகவும், அருளுரையாகவும் இணைத்துள்ளோம்.

**–ரெங்கராஜ தேசிகன்.**

**ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி**

**ஓம் ரெங்கராஜதேசிக சுவாமிகள் திருவடிகள் போற்றி**

## நன்றி!

தமிழைக்கற்றால் வரும் நன்மைகள் என்ற இந்நூல், இரண்டு ஆண்டுகளாக, தினசரி நாள்காட்டிக்காக, எல்லாம்வல்ல குருநாதர் ஓங்காரக்குடிலாசான் பரமானந்த சதாசிவ சற்குரு தவத்திரு. ரெங்கராஜதேசிக சுவாமிகள் அவர்கள் உபதேசித்த அருள்மொழிகளாகும். தமிழின் பெருமையை எல்லாம்வல்ல ஞானிகள் மனமுவந்து அருளிய அருட்கவிகளை ஓங்காரக்குடிலாசான் தொகுத்துச் சொல்லச்சொல்ல எழுதுவதற்கு வாய்ப்பு அருளிய குருநாதர் அவர்களின் பொற்பாத கமலங்களுக்கு கடையேனின் பணிவான வணக்கங்களையும், நன்றிகளையும் உரித்தாக்கிக் கொள்கிறேன். மேலும், குடில் அன்பர்களும், வாஞ்சி மறுதோன்றி அச்சக ஊழியர்களும் சலிப்பில்லாமல் பொறுமையாக இந்த புத்தகம் வெளிவருவதற்கு ஒத்துழைப்பு கொடுத்தமைக்கு நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

**குருநாதரின் திருவடி பணிந்து**

**இரா. மாதவன்.**

**22.09.2003 திங்கட்கிழமை** அன்று திருச்சி,
சங்கிலியாண்டபுரம் அகத்தியர் நாடி ஜோதிடர்
V.T.**பரணீதரன்** மூலம் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க
நிறுவனர்
குருநாதர் தவத்திரு. **ரெங்கராஜதேசிக சுவாமிகள்**
அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழைக்கற்றால் வரும்
நன்மைகள் என்ற நூலுக்கு முன்னுரையும் அருளுரையும்
சுவடிமூலம் அருளவேண்டும் என்று திருவடி பணிந்து
கேட்டபொழுது, **ஆசான் அகத்தீசர் மனம் மகிழ்ந்து தம்
சுவடிமூலம் அருளிய அருள்வாக்கு.**

## ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

மாதவத்தை புரிந்துவரும் அரங்கா போற்றி
மாதவத்தால் ஆட்சிதரும் அரசா போற்றி
மாதவத்தால் அருள்வழங்கும் தேசிகா போற்றி
மாதவனே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தீசர் என் ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் தவசி உமக்கு
பார்காக்க அருந்தவத்தை புரிந்தாய் நீயே
பாருலகில் ஞானிகளின் ஆசி பெற்றாய் 02.

பெற்றாயே உன்தொண்டர் அன்பர்களும்
பெரும்பேற்றை அடைந்திடுவார் ஆசியுண்டு
உற்றதொரு உலகமக்கள் ஞானம் உணர
உயர்வான வழிவகைகள் செய்தாயப்பா 03.

அப்பனே குருவழியை பின்தொடர்ந்தே
அருந்தவ தொண்டனாம் மாதவனும்
ஒப்பில்லா நூல்ஒன்றை தொகுத்தானப்பா
உயர்வான நூலிதுவே என்று சொல்வேன் 04.

சொல்லிடவே தமிழ்கற்றால் என்னும் நூல்
சித்தர்மொழி சொல்கின்ற நூலும் ஆகும்
சொல்லிடுவேன் தமிழ்மொழி வேதமொழி
சிறப்பான மெய்மொழி என்றுரைப்பேன் 05.

உரைத்ததொரு சித்தர்களின் வார்த்தைதொகுத்து
உயர்வுபெற மாதவனும் செய்திட்ட நுலில்
குறையேது நிறைவுதான் அளிப்பாய் ஆசி
குவலயத்தோர் நலமடைவார் நூலை படித்தால் 06.

படித்தவர்க்கு ஞானிகளின் ஆசிகள்கிட்டும்
பாருலகில் நூலிதனை தொட்டவர்க்கெல்லாம்
நாடியவினைகளெல்லாம் அகன்று ஓடும்
நானிலத்தில் திருமூலர் தேரையர் ராமலிங்கன் ஆசி 07.

ஆசியுடன் அகத்தியர் என் ஆசிகிட்டும்
அருமறைக்கு நிகரான நூலிதுஎன்பேன்
ஆசியுண்டு தமிழ்கற்றால் என்னும் நூல்
அற்புத சித்திதரும்நூல் என்று சொல்வேன் 08.

சொல்லிடுவேன் நூலினை வைத்திருப்பவர்க்கெல்லாம்
சிறப்பான ஞானிகளின் ஆசிகிட்டி
நல்லவைகள் பெருகிடுமே ஆசியுண்டு
நலமுண்டு உலகமாற்றம் நடக்கும்பாரே 09.

பாரப்பா பெருஞ்சிறப்பை மக்கள் அடைவார்
பாடினேன் முன்னுரையும் அருளுரையும் இன்று
பார்சிறக்க வெளியிடுவாய் நூலும் தன்னை
பாடினேன் அகத்தியர்யான் ஆசிநூல் முற்றே. 10.

.....சுபம்.....

**22.09.2003 ஞாயிற்றுக்கிழமை** அன்று திருச்சி, சங்கிலியாண்டபுரம் அகத்தியர் நாடி ஜோதிடர் **ஏ.வு.பரணிதரன்** வாயிலாக ஸ்ரீ அகத்தியர் ச்ன்மார்க்க சங்க நிறுவனர் குருநாதர் தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களின் தவச்சிறப்புகள் பற்றியும், அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழைக்கற்றால் வரும் நன்மைகள் என்ற நூலின் சிறப்புகள் பற்றியும், **மகான் நம்மாழ்வார் தம் சுவடிமூலம் அருளிய அருள்வாக்கு.**

## மகான் நம்மாழ்வார் ஆசிகாண்டம்

யோகத்தில் சிறந்ததொரு அரங்கா போற்றி
யோகத்தில் நின்றதொரு அரசா போற்றி
யோகசக்தி ஆனதொரு தேசிகா போற்றி
யோகியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே நம்மாழ்வார் என் ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் உந்தனிற்கே
பார்காக்கும் அரங்கப் பெருமான் நீதானப்பா
பரந்தாமன் அரங்கனின் நாமம் தாங்கி 02.

தாங்கியே அவதாரம் கொண்ட ஞானி
தன்னையே உலகிற்கு அர்ப்பணித்து
ஓங்கார குடிலமைத்து தவமும் செய்தாய்
உந்தனையே ஆழ்வார்நாம் போற்றினோமே 03.

போற்றிடுவோம் நீசெய்த தவமும் வெற்றி
பூவுலகில் ஞானத்தை நிலைநாட்டி நீயும்
நேர்வழியை காட்டினாய் மக்கள் உயர
நல்தொண்டை உணர்த்திய அரங்கா வாழ்க 04.

வாழ்கவே பசிப்பிணியை போக்கி நின்றாய்
வையகத்தில் பலமக்களை வாழ வைத்தாய்
வாழ்வளிக்கும் ஞானிகளுள் உள்ளுரைந்தாய்
வாழ்ந்தாய் நீ சஞ்சரித்தாய் உலகை காக்க 05.

காக்கவே பந்தபாசம் அனைத்தும் நீக்கி
கடுந்தவத்தை சிரமேற்கொண்ட அரங்கா வாழ்க
ஊக்கம்தர நீசெய்த யோகம் வெற்றி
உண்ணாமல் மௌனமாகி யோகம் நின்று 06.

நின்றுநீ செய்திட்ட தவமும் வெற்றி
நிலமதனில் அழியாத நிலை உமக்கு
நன்றுதரும் ஆழ்வாருள் நீயும் நிற்பாய்
நாயகனே உந்தனையே வாழ்த்தினோமே 07.

வாழ்த்தினோம் அருள்செய்வாய் உலகத்தோர்க்கே
வையகத்தில் மேன்மேலும் அருள் உயர்ந்து
வாழ்வுபெற்று உலகமெல்லாம் மகிழ்ந்துவாழ
வாழ்த்திடுவேன் நம்மாழ்வார் ஆசி உமக்கே 08.

உமக்காக நாம்வருவோம் நீ அழைத்தால்
உயர்வான ஆசிதனை வழங்குவோமே
நாமுரைத்தோம் ஆசிநூல் உந்தனிற்கே
நல்லாசிபல பெற்றாய் ஞானிகள்பால் 09.

ஞானிகள்வேறு நீவேறு அல்ல என்பேன்
ஞாலமதை காப்பதுவே உந்தன் சிந்தை
ஞானிகளின் ஆசியினால் நிறைவேறும்தான்
ஞானிகளும் உன்னுள்ளே கலந்து நிற்பார் 10.

நிற்பாரே ஞானிகளுள் நீயும் கலப்பாய்
நீடித்த தவத்தில் நிற்கும் அரங்கா உமக்கு
உற்றதொரு ஆழ்வார்கள் துணையாய் நிற்போம்

உன்வெற்றி சிறந்திடவே அளிப்போம் ஆசி 11.

ஆசியுண்டு ஞானதீட்சை விழா சிறக்க
அருள்தரும் ஞானத்தமிழ் நூலையும் வெளியிட்டு
ஆசியுடன் அருளனைத்தும் மக்களுக்கு ஈவாய்
அன்றுநாள் தீட்சைபெறும் அவரவரும் 12.

அவரவரும் பெரும்பேற்றை அடைந்தவராவார்
அருள்மணக்கும் அரங்கர்நின் கரங்கள்பட்டால்
தவசக்தி அவரவர்க்கும் கூடும்கூடும்
தரணியிலே உயர்பதத்தை அடைந்து வாழ்வார் 13.

வாழ்வார்கள் அரங்கா நின் அருளினாலே
வையகத்தை வாழவைக்கும் ஆழ்வார் நீயே
வாழ்வாங்கு வாழ்ந்திடவே அளித்தேன் ஆசி
வையகமும் வானகமும் வாழ்த்தும் உம்மை 14.

உம்மை உணர்ந்திடவே ஆசிநூல் தந்தோம்
உலகத்தோர் உணர்ந்துமே அருளை பெற்று
இம்மைக்கும் மறுமைக்கும் (இப்பிறப்பு, மறுபிறப்பு) வாழ்வுபெறவே
இயம்பினேன் நம்மாழ்வார் ஆசிநூலை 15.

ஆசியுண்டு அன்பர்கட்கும் தொண்டர்கட்கும்
அரங்கர்நின் அருள்சிறக்க ஆசியுண்டு
நேசம் கொண்டேன் அரங்கா உந்தன்மீதே
நிகழ்த்தினேன் ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே. 16.

– – –சுபம் – – –

ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி

திக்கெல்லாம் புகழ்வாய்ந்த

திருமூலதேவர் அருளிய

# திருவடி சிறப்புகள்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

திருமந்திரம் : திருவடிபேறு: 1598

திருவடி ஞானஞ் சிவம் ஆக்குவிக்கும் – திருவடி ஞானம் சிவமயமாக ஆக்கும். திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும் – திருவடி ஞானம் சிவலோகத்தில் சேர்க்கும். திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும் – திருவடி ஞானம் சீவனைத் சிறைப்படுத்தியிருந்த மலத்தினின்றும் நீக்கும். திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே – திருவடி ஞானமே அணிமாதி சித்திகளையும், முத்திப் பேற்றினையும் அளிக்கும்.

திருவடி ஞானம் – வியாபக அறிவு.

திருவடி தீட்சையால் உண்டாகும் பயன் கூறியவாறு.

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.

திருமந்திரம் : உபதேசம்: 138

தேரில் திருவடியே சிவமாவது – ஆராயின் ஒளியான திருவடியே சிவமாம், சிந்திக்கில் திருவடியே சிவலோகம் – எண்ணிப்பார்க்கின் அவ்வொளியே சிவன் உறைகின்ற உலகம், அது செப்பில் திருவடியே செல்கதி – அதனைச் சொல்லப்புகின் அவ்வொளியே

அவனை அடைவதற்குரிய நெறியாகும், உள் தெளிவார்க்கு திருவடியே தஞ்சம் – அகநோக்குடையார்க்கு ஒளியே புகலிடமாகும்.

அடி – திருவருள், ஒளி. ஒளியின் உருவம் அறியில் ஒளியே என்ற ஆசிரியர் வாக்கைக் காண்க.

திருவடியே சிவலோகத்துக்குச் செல்லும் நெறியாகவும், சிவமாகவும், புகலிடமாகவும் உள்ளது.

திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
திருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்
கருவழி வாற்றிடக் கண்டுகொண் டேனே.

திருமந்திரம் : திருவடிபேறு: 1597

திருவடி வைத்து என் சிரத்து – என்னுடைய சிரசின்மீது திருவடியைச் சூட்டி. அருள் நோக்கி – அருளால் பார்த்து. பெருவடிவைத் தந்த பேர் நந்தி தன்னை – எங்குமாயிருக்கும் பெரிய வடிவினைத் தந்த பெரிய பெருமானை. குரு வடிவிற் கண்ட கோனை – குரு வடிவில் வந்த தலைவனை. எம் கோவை – எம்முடைய அரசனை. கருவழி ஆற்றிடக் கண்டுகொண்டேனே – பிறவி உண்டாகும் வழி உலர்ந்துபோகக் கண்டுகொண்டேன்.

திருவடி வைத்தல் – சங்கற்பத்தால் திருவருட் சத்தியைப் பதித்தல். அருள் நோக்கல் – குருவின் சத்தியைச் சீடனிடம் பார்வையால் பதித்தல். பரிசமும் நோக்கமும் ஞானதீட்சையாகும். ஆற்றுதல் – உலர்த்தல், நீக்குதல்.

குருநாதன் அருளிய ஞானதீட்சையைக் கூறியவாறு.

ஞானியர்களின் திருவடி பூஜைதான்
உண்மை ஆன்மீகம் என்று உலகறியச்செய்த வள்ளல்,
குருநாதர் தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**
அவர்கள் தொகுத்து வழங்கிய

## சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி
ஓம் அகப்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் அசுவினித்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் அத்திரி மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் அநுமான் திருவடிகள் போற்றி
ஓம் அம்பிகானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் அருணகிரிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் அருள்நந்திசிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் அல்லமாபிரபு திருவடிகள் போற்றி
ஓம் அழுகண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி 10

ஓம் இடைக்காடர் திருவடிகள் போற்றி
ஓம் இராமலிங்கசுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் இராமதேவர் திருவடிகள் போற்றி
ஓம் இராமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் உமாபதி சிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் ஔவையார் திருவடிகள் போற்றி
ஓம் கஞ்சமலைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடைப்பிள்ளைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடுவெளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கண்ணானந்தர் திருவடிகள் போற்றி 20

ஓம் கண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கணநாதர் திருவடிகள் போற்றி
ஓம் கணபதிதாசர் திருவடிகள் போற்றி
ஓம் கதம்பமகரிஷி திருவடிகள் போற்றி

ஓம் கபிலர் திருவடிகள் போற்றி
ஓம் கமலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கருவூர்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் கல்லுளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கலைக்கோட்டு முனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கவுபாலச்சித்தர் திருவடிகள் போற்றி 30

ஓம் கணராமர் திருவடிகள் போற்றி
ஓம் காகபுஜண்டர் திருவடிகள் போற்றி
ஓம் காசிபர் திருவடிகள் போற்றி
ஓம் காலாங்கிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் குகைநமச்சிவாயர் திருவடிகள் போற்றி
ஓம் குதம்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் குமரகுருபரர் திருவடிகள் போற்றி
ஓம் குருதட்சணாமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் குருராஜர் திருவடிகள் போற்றி
ஓம் குறும்பைச்சித்தர் திருவடிகள் போற்றி 40

ஓம் கூர்மானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் கொங்கணேஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் கோரக்கர் திருவடிகள் போற்றி
ஓம் கௌசிகர் திருவடிகள் போற்றி
ஓம் கௌதமர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கமுனிச் சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கர மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் சங்கிலிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சச்சிதானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சட்டநாதர் திருவடிகள் போற்றி 50

ஓம் சண்டிகேசர் திருவடிகள் போற்றி
ஓம் சத்யானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சிவயோகமாமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சிவவாக்கியர் திருவடிகள் போற்றி

ஓம் சிவானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுகப்பிரம்மர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் சூதமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சூரியானந்தர் திருவடிகள் போற்றி 60

ஓம் சூலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சேதுமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சொரூபானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் ஜம்பு மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் ஜமதக்னி திருவடிகள் போற்றி
ஓம் ஜனகர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனந்தனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனாதனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனக்குமாரர் திருவடிகள் போற்றி
ஓம் ஜெகநாதர் திருவடிகள் போற்றி 70

ஓம் ஜெயமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் ஞானச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் டமாரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் தன்வந்திரி திருவடிகள் போற்றி
ஓம் தாயுமான சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருகோணச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமாளிகை தேவர் திருவடிகள் போற்றி 80

ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் திருவள்ளுவர் திருவடிகள் போற்றி
ஓம் தூர்வாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் தேரையர் திருவடிகள் போற்றி

ஓம் நந்தனார் திருவடிகள் போற்றி
ஓம் நந்தீஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் நாதாந்தசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் நாரதர் திருவடிகள் போற்றி
ஓம் நொண்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பட்டினத்தார் திருவடிகள் போற்றி 90

ஓம் பத்ரகிரியார் திருவடிகள் போற்றி
ஓம் பதஞ்சலியார் திருவடிகள் போற்றி
ஓம் பரத்துவாசர் திருவடிகள் போற்றி
ஓம் பரமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் பராசரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பாம்பாட்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பிங்களமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் பிடிநாகீசர் திருவடிகள் போற்றி
ஓம் பிருகுமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பிரும்மமுனிவர் திருவடிகள் போற்றி 100

ஓம் பீர்முகமது திருவடிகள் போற்றி
ஓம் புண்ணாக்கீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலத்தீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலிப்பாணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பூனைக்கண்ணார் திருவடிகள் போற்றி
ஓம் போகமகாரிஷி திருவடிகள் போற்றி
ஓம் மச்சமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் மஸ்தான் திருவடிகள் போற்றி
ஓம் மயூரேசர் திருவடிகள் போற்றி
ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி 110

ஓம் மார்க்கண்டேயர் திருவடிகள் போற்றி
ஓம் மாலாங்கன் திருவடிகள் போற்றி
ஓம் மிருகண்டரிஷி திருவடிகள் போற்றி
ஓம் முத்தானந்தர் திருவடிகள் போற்றி

ஓம் மெய்கண்டதேவர் திருவடிகள் போற்றி
ஓம் மௌனசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யாகோபு திருவடிகள் போற்றி
ஓம் யூகிமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் யோகச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யோகானந்தர் திருவடிகள் போற்றி 120

ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வசிஷ்டமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரதரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வராகிமிகி திருவடிகள் போற்றி
ஓம் வால்மீகி திருவடிகள் போற்றி
ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131

**ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள் திருவடிகள் போற்றி போற்றி.**

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தான்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் – 3047.

வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி – என் சிவகுருநாதனாகிய நந்தியின் திருவடி வாழ்க. வாழ்கவே வாழ்க மலமறுத்தான் பதம் – மலக்கட்டினை நீக்கியருளிய அவனது திருவடி வாழ்க. வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத்தவன் தாள் – மலமறுத்தலோடு உண்மை ஞானத்தையும் அருளிய அவனது திருவடி வாழ்க.

வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே – நின்மலனாகிய அவனது திருவடி வாழ்க!

இது குருவுக்குரிய வாழ்த்து. குருவே சிவமாதலின் சிவத்துக்கும் ஆம்.

## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் **தமிழ்** என்னும் சொல்லுக்கிட்ட உரை

திருச்சிற்றம்பலம்

தமிழ் என்பது த்–அ–ம்–இ–ழ் என்னும் ஐந்து அலகு நிலையுடைத்து. த், ம், ழ் – ஐடசித்கலை. அ, இ – சித்கலை.

**அ** – அகண்டாகார சித்தை விளக்கும் ஓங்கார பஞ்சாக்கரத்துள் பதிநிலை அக்கரமாம்.

**இ** – பதியை விட்டு நீங்காத சித்தை விளக்கும் வியவகாரத்தால் அனந்தாகார வியஷ்டி பேதங்காட்டும் ஜீவசித்கலை அக்கரமாம். பதி – சிதாத்ம கலைகளுக்கு ஆதாரமாகி உயிரினுக்கு உடலையொத்துக் குறிக்கப்படும் த், ம், ழ் எழுத்துக்களுக்கு உரை :

**த்** – ஏழாவது மெய், **ம்** – பத்தாவதாகும், **ழ்** – 15வது இயற்கை உண்மைக் சிறப்பியல் அக்கரமாம்.

ஐந்தலகுநிலையும் உபய கலைநிலையும் மூன்று மெய்நிலையும் அமைத்துள்ளதும், சம்புபக்ஷத்தாரால் அனாதியாய் – சுத்த சித்தாந்த ஆரிஷ ரீதிப்படி கடவுள் அருளாணையால் – கற்பிக்கப்பட்டதும், எப்பாஷைகளுக்கும் பிதுர்பாஷையென்று ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், இனிமை என்று நிருத்தம் சித்திக்கப்பெற்றுள்ளதுமான தமிழ் என்னும் இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழிக்குச் சுத்த சித்தாந்த பதஉரை.

**த் – அ** : தத்வரூபாதி சிவபோகந்தமான தசகாரிய இயற்கை உண்மைக் கட்டளை நிலையில், முன் அலகு

நிலைப்பொருள் கூறியவிடத்துக் குறித்த ஏழாவது நிலையாகிய த் என்பது சிவரூப இயற்கையுண்மைக் கட்டளையாம். அ – அகண்டாகார சித்கலாரூப ஓங்காரத்துட் பொருட்பிரதம விலக்கிய வியக்தி அக்கரம். பன்னீருயிர் நிலையிற்றலையாய முதல் அகரமாதலில், அதுவே பிரமாதி பரசிவாந்த நவநிலைக்கும் அனாதியாதி காரணமாயுள்ள இயற்கை உண்மைப் பரிபூரணப் பொருளிலக்காம்; என்னவே சிவரூபமாகும் தகராகாசத்தில் சுத்த சிவமாகும் அருட்ஜோதி இணைந்துள்ள பூரணானந்த ஸ்வரூப பரபதி வியக்தமாயிற்று.

**ம்** – **இ** – சங்காரப் பிரணவமாகிய மகாரம் முக்தான்மாக்களுக்கு ஒளிவண்ணச் சதானந்தமாயும் பெத்தான்மாக்களுக்கு இருள்வண்ண மல ரூபமாயும் இருந்து **கற்பாந்த ப்ரளய முடிவின் சிருஷ்டி திதியாதிகளில் சிதான்ம சக்தியாகிய ஜீவனுக்கு அதிகரணமாகவும், முற்குறித்த பத்தாவது நிலயமாகிய ஆன்மாதாரமாகியும் உள்ளதெனப் பொருளாம்.** இ – பன்னீருயிர் நிலைகளில் மூன்றாம்நிலை உயிராகிய இகாரம் திரிகலா ஆன்மவருக்கத்தில் அபரமாகிய சகலா கலரையும் பரமாகிய பிரளயாகலரையும் கீழ்ப்படுத்தி அவ்விரு கூட்டத்தாருக்கும் மேற்பட்டு நின்ற சுத்த விஞ்ஞானகலராகிய சிதாத்மாக்களைதச் சுட்டுகின்றதாம். என்னவே, ஆதார ஆதேயக் கூட்டுறவால் என்றுந் தோன்றி விளங்கும் சிதான்ம வருக்கங்கள் பரபதி லக்ஷியமாகிய பூரணானந்தத்திற்கு அனுபவிகளாக உரியவர்களெனக் குறிக்கொள்ளல் வேண்டும்.

**ழ்** – இந்தச் சிறப்பில் அக்கரம் பதினெண் மெய்களில் பக்ஷமுடிபின் என் குறிப்பில் நின்று, **சிவயோக பூமியாகிய பரதகண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந்தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலும் இல்லாததாயும்,** பதினெண்ணிலமாகக் குறிக்கப்பட்ட செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் இருமைக்கும்

ஒற்றுமையுரிமையாயும், முத்துறைத் தமிழுக்குள் முதன்மைத் துறையானதும், ரிக், யஜுர், சாமம் என்னும் சமஸ்கிருத வேதத்திரயப் பொருள் அனுபவத்தை எளிதில் கற்றுணர்ந்து தெளிந்து அனுபவித்தற்குப் பரமேசுரனது திருவருளைப் பஞ்சாக்ஷர முத்தொழிற் காரியமான பஞ்சதசாக்கரியால் பிரத்தியக்ஷானுபவம் சித்திக்கச் செய்யும் நிலயமானதும், ஸ்ரீ மாணிக்கவாசகர், சம்பந்தர், நாவரையர் (திருநாவுக்கரசர்), சுந்தரர், திருமூலர் முதலிய மகாபுருஷர்களால் சாத்திர தோத்திரங்களாக அருளிச் செய்யப்பட்டு இருக்கும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம் என்னும் பரமார்த்த ரகசியங்களை உடையதும், பலநாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதகாசிரியர் சந்நிதியில் தாழ்ந்து சகபாடிகளோடு சூழ்ந்து சுரஒலி பேதங்களைத் தேர்ந்துஉழைப்பெடுத்து ஓதினாலும் பாடமாவதற்கு அருமையாயும், பாடமானாலும் பாஷியம், வியாக்கியானம், டீக்கா, டூக்கா, டிப்பணி முதலிய உரைகோள் கருவிகளையும் பொருள்கொள்ளத் தேட வேண்டியதாயும், அவ்வகைகளையும் தேடிக் கைவரினும் அக்கருவிகளால் போதகம் பெற வேண்டியதற்குப் பாஷியகாரர்கள் வியாக்கியான கர்த்தர்கள் டீக்காவல்லபர்கள் டூக்காசூசகர்கள் முதலிய போதக உபபோதக ஆசாரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும் இருக்கிற ஆரியம் மகாராட்டிரம் ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல், பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும், ஒலி இலேசாயும், கூட்டென்னும் சந்தி அதிசுலபமாயும், எழுதவும் கவி செய்யவும்மிக நேர்மையாயும், அக்ஷர ஆரவாரம், சொல்லாடம்பரம் முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தசுகளையும்தன் பாஷையுள் அடக்கி ஆளுகையால் ஆண்டன்மையைப் பொருந்தியதுமான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ், ற், ன் என்னும் முடிநடு அடி சிறப்பியல் அக்கரங்களில் முடிநிலை இன்பானுபவ சுத்த

மோனாதீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கை உண்மைத் தனிதலைமைப் பெருமைச் சிறப்பியல் ஒலியாம்.

உரைகூறிப்போந்த சுத்தசித்தாந்த ஆரிடரீதி முப்பதவுரைப் பொழிப்பு : **மருளியற்கை மல இருளைப் பரிபாகசத்தியால் அருளொளியாக்கி, அதற்குள்ளீடான சிதாத்ம சிற்கலாசத்தி என்னும் சுத்த ஆன்மாவானது, தகர, ககன, நடன அருட்பெருஞ்ஜோதி என்னுஞ் சுதத் சிவானந்த பூரணத்தை சுத்த மோனாஅத்த வியலால் அனுபவிக்கும் இயற்கை உண்மையே தமிழ் என்னும் சொற்பொருள் சுட்டினவாறு காண்க.**

**இதன் கருத்து யாதெனில் :** தமிழ்ப்பாஷையே அதிசுலபமாகச் சுத்தசிவானுபூதியைக் கொடுக்குமென்பதாம்.

திருச்சிற்றம்பலம்

## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் அருளிய தென்மொழி – தமிழ்

**இடம்பத்தையும்,** ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெருமறைப்பையும், பொழுதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல வொட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் லேசுடையதாய், பாடுதற்கும், துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், **சாகாக்கல்வியை** லேசில் அறிவிப்பதாய்த், **திருவருள்** வலத்தால் கிடைத்த **தென்மொழி** யொன்றினிடத்தே மனம் பற்றச்செய்து, அத்தென்மொழிகளால் பலவகைத் தோத்திரப்பாட்டுகளை பாடுவித்தருளினீர்.

சிதம்பரம்
இராமலிங்கம்

## திக்கெல்லாம் புகழ்வாய்ந்த
## மகான் திருமூலதேவர் அருளிய
## திருமந்திரம்

**மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது**
**காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்**
**ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.**

திருமந்திரம்: 99

மூலன் உரை செய்த மூவாயிரந்தமிழ் – மூலனாகிய நான் உரைத்த மூவாயிரம் தமிழ் மந்திரங்களைக் கொண்ட திருமந்திர மாலை, ஞாலம் அறியவே நந்தி அருளது – உலகவர் அறிந்து உய்தி பெறும் பொருட்டே, குருநாதனாகிய நந்தியினது அருளால் உரைத்ததாம்; காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்–உலகவர் காலை எழுந்தவுடன் இதன் பொருள் உணர்ந்து ஓதி வந்தால், ஞாலத்தலைவனை நண்ணுவர்–உலக நாயகனை அடைந்து இன்புறுவர்.

மூவாயிரந்தமிழ் – மூவாயிரம் தமிழ் மந்திரம். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு மந்திரம் என்றே உணர்தல் வேண்டும். கருத்தறித்து ஓதலாவது, சொல்லும் மந்திரத்தின் பொருளுணர்ந்து சொல்லுதல்.

**சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்**

என்ற மாணிக்கவாசகர் வாக்கும் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

மூவாயிரம் பாடல்களையும் பொருளுணர்ந்து ஓதினால் இறைவனை அடையலாம்.

மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூல னுரைசெய்த முந்நூறு மந்திரம்
மூல னுரைசெய்த முப்ப துபதேசம்
மூல னுரைசெய்த மூன்றும் ஒன்றாமே.

திருமந்திரம் : 3046

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ் – திருமூலதேவர் அருளிச் செய்த இம்மூவாயிரம் பாடல்களும், மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம் – அவர் அருளிச் செய்த முந்நூறு மந்திரப்பாடல்களும், மூலன் உரைசெய்த முப்பது உபதேசம் – அவர் அருளிச் செய்த முப்பது உபதேசப்பாடல்களும், மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே – அவர் அருளிச்செய்த மூன்றுவகைப் பாடல்களும் ஒரே பொருளைக் குறிப்பனவாம்.

இதுவரை வந்துள்ள பாடல் தொகை 3045. ஆனால் சில பாடல்கள் இரண்டுமுறை மூன்று முறை வந்துள்ளன. ஆதலின் மொத்தமுள்ள பாடல்கள் இந்நூலுக்குரியன சுமார் 3000 என்பதாம். முந்நூறு மந்திரம் என்பது மந்திர சாத்திரமாக இருக்கக்கூடும். இஃது இப்போது இல்லை. முப்பது உபதேசம் என்பது மூவாயிரத்தில் உபதேசம் என்ற தலைப்பில் வரும் முப்பது பாடல்களைக் குறிப்பது என்பது கருத்து. இஃது ஆராய்ச்சிக்குரியது.

திருமூலர் அருளிச் செய்தவை இவை என்று கூறியவாறு.

## தமிழே திருமந்திரமாகும்

## அனைவருக்கும் தமிழ் வேண்டும்

## மகான் தேரையர் சிவபூஜா விதி

ஆச்சப்பா தமிழினுட பெருமை கேளு

**அப்பனே அகத்தியன்தான் நின்றாரப்பா**

(அகத்தியரே தமிழ், தமிழே அகத்தியர்)

**வாச்சப்பா வடுகருக்கும் ஆகும் பாரு**

(ஆந்திர மக்களும் தமிழ் கற்றால் ஞானம்உண்டு)

**வகையான பிராமணர்க்கு ஆகும் பாரு**

(பிராமணர்களும் தமிழ் கற்கவேண்டும்)

**காச்சப்பா கன்னடியர்க்கு ஆகும் பாரு**

(கன்னடர்களும் தமிழ் கற்கவேண்டும்)

**கலையான குச்சிலியர்க்கு ஆகும் பாரு**

(குஜராத்தியர்களும் தமிழ் கற்கவேண்டும்)

**மாச்சப்பா மராஷ்டகருக்கு ஆகும் பாரு**

(மகாராஷ்ட்ர மக்களும் தமிழ் கற்கவேண்டும்)

**மறையான மிலேச்சருக்கும் ஆகும் பாரே. 66**

(ஜீவகாருண்யத்தை அறியும் பக்குவம் இல்லாதவர்களும் தமிழைக் கற்கவேண்டும்)

--

**பாரப்பா அனைவருக்கும் வேனும் வேனும்**

(உலகத்தில் உண்மைப்பொருளை அறிந்து ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்றவர்கள், தமிழைக்கற்றால் ஜென்மத்தைக் கடைத்தேற்றலாம்)

**பாங்கான க்ஷத்திரியர்க்கு வேனும் வேனும்**

(நிதீ தவறாது அரசாட்சியை செம்மையாக நடத்தவேண்டம் என்றால் தமிழைக் கற்கவேண்டும். எ.கா.

கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே.

திருமந்திரம் 238

--

**நேரப்பா வைசியர்க்கு வேனும் வேனும்**

(வைசியர்களும் தமிழைக் கற்கவேண்டும்)

**நிலையான சூத்திரர்க்கு வேனும் வேனும்**

(சூத்திரர்களும் தமிழைக்கற்க வேண்டும்)

**தேரப்பா துலுக்கருக்கும் வேனும் வேனும்**

(துலுக்கரும் தமிழைக் கற்கவேண்டும்)

**தெளிவான கலிங்கருக்கும் வேனும் வேனும்**

(கலிங்கரும் தமிழைக் கற்கவேண்டும்)

**ஏரப்பா எடுத்திருக்கும் அண்டத்தோர்க்கும்**

**இயலான தமிழ்அதுதான் வேனும் பாரே. 67**

(உலகத்தில் தோன்றிய மனித வர்க்கம் அத்தனை பேரும் தமிழைக் கற்கவேண்டும். அப்பொழுதுதான் ஞானத்தை எளிதில் அடையமுடியும். எனவே தமிழ் கற்கவேண்டும்)

பாரப்பா அதலம் என்றும் விதலம் என்றும்
பரிவான நிதலம் என்றும் ஏழுலோகம்
மேரப்பா மேல்ஏழு லோகம் உண்டு
மெய்யான லோகமடா சத்திய லோகம்
ஏரப்பா இப்படியே கூடி நின்றால்
இயலான அண்டமடா ஒன்றும் ஆகும்
ஆரப்பா ஆயிரத்து எட்டு அண்டம்
அப்பனே அவர்களுக்கும் தமிழே வேணும். 68

இவ்வுலகத்தில் உள்ள அனைவரும் தமிழைக் கற்கவேண்டும் என்று சொன்ன தேரைய மகரிஷி, இந்த அண்டம் மட்டுமல்லாமல், 1008 அண்டங்களிலுள்ள அத்தனைபேரும் தமிழைக் கற்கவேண்டும் என்று சொல்லியுள்ளார். ஏனென்றால் தமிழில்தான் ஞானத்தை எளிதில் அறிந்துகொள்ள முடியும். எனவே, தமிழே ஞானம், ஞானமே தமிழ்.

**வேணுமடா சிதம்பரத்தைப் பார்க்க என்றால்**
**விரிவான தமிழ் அதுதான் வேணும் வேணும்**

(சித்+அம்பரம் = சிதம்பரம். சிதம்பரம் என்றாலே புருவமத்தியாகிய சுழிமுனையே ஆகும். சுழிமுனை இரகசியத்தை அறிவத்றகு தமிழைக் கற்கவேண்டும். தமிழைக் கற்றால் எளிதில் சுழிமுனை இரகசியத்தை அறிந்துகொண்டு மரணமில்லாப் பெருவாழ்வு பெறலாம்.)

**பூணுமடா வாலையைத்தான் பூண என்றால்**
**புகழாகத் தமிழதுதான் வேணும்வேணும்**

(இயற்கை அன்னையாகிய வாலைதேவியை தமிழ்கற்றால்தான் அறிந்துகொள்ள முடியும். இயற்கை அன்னை என்றம் யெளவனமாகவே இருப்பாள். அவளுக்கு முதுமை இல்லை.)

**தோணுமடா சிவயோகம் வாசியோகம்**
**தூக்கவென்றால் தமிழதுதான் வேணும்வேணும்**

தமிழைக் கற்றால்தான் வாசியோகமாகிய சிவயோகத்தை அறியமுடியும். சிவயோகத்தை அறிந்து, இடகலையாகிய சந்திர கலையையும், பிங்கலையாகிய சூரிய கலையையும் சேர்த்து, ரேசித்து, பூரித்து, புருவமத்தியாகிய சுழிமுனையில் ஏற்ற முடியும்.)

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே. –திருமந்திரம் 571.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனெ –திருமந்திரம் 575.

ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லிரேல்
நீரா யிரமும் நிலமாயி ரத்தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆணையே –திருமந்திரம் 722.

**ஆணுமடா அனைவருக்கும் வேணும்வேணும்**
**அப்பனே அனைவரும்தான் அறிந்து பாரே. 69.**

(சரியை, கிரியை, யோக, ஞானம் அல்லது அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அறிந்துகொள்ள தமிழைக் கற்கவேண்டும்)

கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவான்
நற்றாள் தொழாஅர் எனின்? –திருக்குறள் 2.

மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் –திருக்குறள் 3.

பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அருளிய

# தமிழைக் கற்றால் வரும் நன்மைகள்

## சரியை, கிரியை மார்க்கம்

1. தமிழைக்கற்றவன் நன்றியுடன் நடந்துகொள்வான்.
2. தமிழைக்கற்றவன் நன்றியை மறவான்
3. தமிழைக்கற்றவன் நடுவுநிலையாய் நடந்துகொள்வான்.
4. தமிழைக்கற்றவன் ஓரம் பேசான்
5. தமிழைக்கற்றவன் ஒருமையுடன் நடந்துகொள்வான்.
6. தமிழைக்கற்றவன் விட்டுக்கொடுத்து வாழ்வான்.
7. தமிழைக்கற்றவன் விருந்தை உபசரிப்பான்.
8. தமிழைக்கற்றவன் இனிமையாக நடந்துகொள்வான்.
9. தமிழைக்கற்றவன் குற்றத்தை மன்னிக்கும் மனம் உள்ளவனாக இருப்பான்.
10. தமிழைக்கற்றவன் பொறாமையின் தீமையை அறிவான்.
11. தமிழைக்கற்றவன் பொறாமையற்று இருப்பான்.
12. தமிழைக்கற்றவன் பொறாமையே தன்னைக் கொல்லும் நோய் என்றறிவான்.
13. தமிழைக்கற்றவன் பேராசையின் சீற்றத்தை அறிவான்.
14. தமிழைக்கற்றவன் பேராசையற்று இருப்பான்.
15. தமிழைக்கற்றவன் கட்டுக்கடங்கா சினத்தை கட்டுவான்.
16. தமிழைக்கற்றவன் சினமே நம்மைக் கொல்லும் கூற்றுவன் என்றறிவான்.
17. தமிழைக்கற்றவன் வன்சொற்கள் பேசான்.
18. தமிழைக்கற்றவன் வளமான வாழ்வை அறிவான்.
19. தமிழைக்கற்றவன் நட்பை வளர்ப்பான்.
20. தமிழைக்கற்றவன் தகுதியில்லா நட்பே கூற்றுவன் என்றறிவான்.
21. தமிழைக்கற்றவன் பகைவனுக்கும் அருள்செய்வான்.
22. தமிழைக்கற்றவன் பகைமை பாராட்டமாட்டான்.
23. தமிழைக்கற்றவன் பகையை வளர்க்கமாட்டான்.
24. தமிழைக்கற்றவன் பழிக்கு அஞ்சுவான்.
25. தமிழைக்கற்றவன் பழிவாங்க மாட்டான்.
26. தமிழைக்கற்றவன் பண்புடன் நடந்துகொள்வான்.

27. தமிழைக்கற்றவன் பண்பாளன் ஆவான்.
28. தமிழைக்கற்றவனே குணப்பண்பை வளர்த்துக் கொள்வான்.
29. தமிழைக்கற்றவன் சான்றோன் ஆவான்.
30. தமிழைக்கற்றவன் திருக்குறள் நுட்பத்தை அறிவான்.
31. தமிழைக்கற்றவன் தன்னலமற்று இருப்பான்.
32. தமிழைக்கற்றவன் பிறர்நலம் பேணுவான்.
33. தமிழைக்கற்றவன் தன்னை அர்ப்பணிப்பான்.
34. தமிழைக்கற்றவன் தமிழே இனிய தாய் என்பதை அறிவான்.
35. தமிழைக்கற்றவன் தமிழின் பெருமையை உணருவான்.
36. தமிழைக்கற்றவன் தமிழ் மலரினும் மென்மை என்பதை அறிவான்.
37. தமிழைக்கற்றவன் தமிழே உலகம் என்பதை அறிவான்.
38. தமிழைக்கற்றவன் தமிழே தேன் என்பதை அறிவான்.
39. தமிழைக்கற்றவன் தமிழே இனிமை என்று அறிவான்.
40. தமிழைக்கற்றவன் கற்றவன் தமிழ்த்தாயின் மகனும் ஆவான்.
41. தமிழைக்கற்றவன் ஜாதி–மத வேற்றுமை பாரான்.
42. தமிழைக்கற்றால் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளலாம்.

## யோக, ஞானம்

1. தமிழைக்கற்றவன் தன்னை அறிவான்.
2. தமிழைக்கற்றவன் உண்மைப்பொருள் அறிவான்.
3. தமிழைக்கற்றவன் உண்மைப் பொருளை தமிழால்தான் எளிதில் அறியமுடியும் என்பதை அறிவான்.
4. தமிழைக்கற்றவன் உண்மைப்பொருள் தமிழில்தான் உள்ளது என்பதை அறிவான்.
5. தமிழைக்கற்றவன் அதுநாம் என்று அறிவான்.
6. தமிழைக்கற்றவன் நாமே அது என்று அறிவான்.
7. தமிழைக்கற்றவன் அதுவும், நாமும் ஒன்றென்றும் அறிவான்.
8. தமிழைக்கற்றவன் எளிதில் பரம்பொருளை அறிவான்.
9. தமிழைக்கற்றவன் எளிதில் பரம்பொருளை அடைவான்.

10. தமிழைக்கற்றவன் ஜீவகாருண்யத்தை அறிவான்.
11. தமிழைக்கற்றவன் மனிதாபிமானத்தை அறிந்து கொள்வான்.
12. தமிழைக்கற்றவன் மனிதாபிமானத்தை உள்ளவனே மாமனிதன் என்று அறிந்துகொள்வான்.
13. தமிழைக்கற்றவன் நேயத்தை வளர்த்துக் கொள்வான்.
14. தமிழைக்கற்றவன் இனிமையாகப் பேசி அறத்தைப் பெருக்கிக்கொள்வான்.
15. தமிழைக்கற்றவன் தூயமனமும் மலர்ந்த முகமும் இன்சொல்லும் அறம் என்பதை அறிவான்.
16. தமிழைக்கற்றவன் ஜீவதயவே உண்மை ஆன்மீகம் என்று அறிவான்.
17. தமிழைக்கற்றவன் ஜீவகாருண்யமே கடவுள் தன்மை என்பதை அறிவான்.
18. தமிழைக்கற்றவன் ஜீவதயவுடன் நடந்துகொள்வான்.
19. தமிழைக்கற்றவன் ஜீவகாருண்யமே ஞானவீட்டின் திறவுகோல் என்பதை அறிவான்.
20. தமிழைக்கற்றவன் மூன்றுவகை இடை, பின், சுழிமுனையை அறிவான்.
21. தமிழைக்கற்றவன் மூன்றுவகை நாடிகளையும் அறிவான்.
22. தமிழைக்கற்றவன் இடை, பின், சுழிமுனையை அறிந்து சுழிமுனையில் சார்ந்திருப்பான்.
23. தமிழைக்கற்றவன் புருவமத்தியில் ஜோதியைக் காண்பான்.
24. தமிழைக்கற்றவன் புருவமத்தியில் சிதம்பர நடனத்தைக் காண்பான்.
25. தமிழைக்கற்றவன் தூல–சூட்சமத்தை அறிவான்.
26. தமிழைக்கற்றவன் தூல–சூட்சமத்தின் மாசை அறிவான்.
27. தமிழைக்கற்றவன் தூலத்தின் துணைகொண்டே சூட்சமத்தை ஆக்கம்பெறச் செய்வான்.
28. தமிழைக்கற்றவன் உண்மை பக்தியை அறிவான்.
29. தமிழைக்கற்றவன் ஞானம்–அஞ்ஞானத்தை அறிவான்.
30. தமிழைக்கற்றவன் ரூப–அரூபத்தை அறிவான்.
31. தமிழைக்கற்றவன் பாச பந்தத்தை அறிவான்.
32. தமிழைக்கற்றவன் பாச பந்தத்தை அறுப்பான்.
33. தமிழைக்கற்றவன் சத்து சித்து ஆனந்தம் அறிவான்.
34. தமிழைக்கற்றவன் அகரம் உகரம் மகரம் அறிவான்.
35. தமிழைக்கற்றவன் சத், அசத்தை அறியலாம்.

36. தமிழைக்கற்றவன் ஞானி ஆவான்.
37. தமிழைக்கற்றவன் கடவுள் ஆவான்.
38. தமிழைக்கற்றவன் சுத்தம் அசுத்தத்தை அறிவான்.
39. தமிழைக்கற்றவன் அசுத்தத்தை நீக்கி, சுத்தத்தை நிலைப்படுத்திக் கொள்வான்.
40. தமிழைக்கற்றவன் பிறர் குற்றங்களைக் காணான்.
41. தமிழைக்கற்றவன் பிறப்பும்–இறப்பும் அறிவான்.
42. தமிழைக்கற்றவன் பசியையும்–காமத்தையும் அறிவான்.
43. தமிழைக்கற்றவன் பாவ–புண்ணியத்தை அறிவான்.
44. தமிழைக்கற்றவன் பாவத்தை நீக்கி புண்ணியத்தைப் பெருக்கிக்கொள்வான்.
45. தமிழைக்கற்றவன் சிற்றறிவு–பேரறிவை அறிவான்.
46. தமிழைக்கற்றவன் சிற்றின்பம்–பேரின்பம் அறிவான்.
47. தமிழைக்கற்றவன் சிற்றின்பத்துள், பேரின்பம் உள்ளது என்பதை அறிவான்.
48. தமிழைக்கற்றவன் நரக–சொர்க்கத்தை அறிவான்.
49. தமிழைக்கற்றவன் நம்உடம்பே நரக–சொர்க்கமாக இருப்பதை அறிவான்.
50. தமிழைக்கற்றவன் நித்தியமும், அநித்தியமும் அறிவான்.
51. தமிழைக்கற்றவன் அநித்தியத்தை உடல்மாசு தான் காரணம் என்பதை அறிவான்.
52. தமிழைக்கற்றவன் நல்வினை–தீவினையை அறிவான்.
53. தமிழைக்கற்றவன் நல்வினை–தீவினைக்கு உடல்மாசு தான் காரணம் என்பதை அறிவான்.
54. தமிழைக்கற்றவன் விஞ்ஞானத்தையும், மெய்ஞானத்தையும் அறிவான்.
55. தமிழைக்கற்றவன் விஞ்ஞானத்துள் மெய்ஞானத்தை அறிவான்.
56. தமிழைக்கற்றவன் மனமாசுக்கு உடல்மாசு தான் காரணம் என்பதை அறிவான்.
57. தமிழைக்கற்றவன் உடல்மாசு அற்றவனை அறிவான்.
58. தமிழைக்கற்றவன் உடல் மாசற்றவன் திருவடியை பற்றுவான்.
59. தமிழைக்கற்றவன் ஊனுடம்பை சிவ ஆலயமாக பார்ப்பான்.

60. தமிழைக்கற்றவன் உடம்பே சிவலிங்கம் என்பதை அறிவான்.

61. தமிழைக்கற்றவன் உடம்பே சதாசிவம் என்பதை அறிவான்.

62. தமிழைக்கற்றவன் உடம்பே சிதம்பரம் என்பதை அறிவான்.

63. தமிழைக்கற்றவன் உடம்பே திருக்கூத்து என்று அறிவான்.

64. தமிழைக்கற்றவன் உயிரையும், உடம்பையும் அறிவான்.

65. தமிழைக்கற்றவன் உடம்பே பிறவிப் பிணக்கு மருந்து என்பதை அறிவான்.

66. தமிழைக்கற்றவன் உடம்பே பெண் என்று அறிவான்.

67. தமிழைக்கற்றவன் உடம்பில் புருஷதத்துவத்தை அறிவான்.

68. தமிழைக்கற்றவன் தம்முள் அமிழ்த பானத்தை அறிவான்.

69. தமிழைக்கற்றவன் அமிழ்த பானத்தை உண்பான்.

70. தமிழைக்கற்றவன் அறியாமைக்கு உடம்பு தான் காரணம் என்றறிவான்.

71. தமிழைக்கற்றவன் அறியாமைக்கு காரணம் உடம்புதான் என்றறிந்து உடல்மாசை நீக்கிக் கொள்வான்.

72. தமிழைக்கற்றவன் உடல்மாசு அற்றவன் திருவடியை நாடுவான்.

73. தமிழைக்கற்றவன் உடல்மாசு ஆலயம் என்பதை அறிவான்.

74. தமிழைக்கற்றவன் உடம்பே ஆலயம் என்பதை அறிவான்.

75. தமிழைக்கற்றவன் உடல்மாசு அற்றிட, உடல் மாசு அற்றவன் திருவடியைப் பற்றுவான்.

76. தமிழைக்கற்றவன் ஞானிகளை அடையாளம் கண்டுகொள்வான்.

77. தமிழைக்கற்றவன் ஞானி யார்? அஞ்ஞானி யார்? என்பதை அறிந்துகொள்ளலாம்.

78. தமிழைக்கற்றவன் ஞானிகளே கடவுள் என்று அறிவான்.

79. தமிழைக்கற்றவன் சிவனே சிவஞானி என்பதை அறிவான்.

80. தமிழைக்கற்றவன் தயவுடன் வாழ்வான்.

81. தமிழைக்கற்றவன் உயிரினங்கள் அனைத்தும் பரம்பொருளின் வடிவமாகக் காண்பான்.

82. தமிழைக்கற்றவன் காமத்தின் கொடுமையை அறிவான்.

83. தமிழைக்கற்றவன் காமத்தை அடக்குவான்.

84. தமிழைக்கற்றவன் என்றும் இளமையுடன் இருப்பான்.

85. தமிழைக்கற்றவன் சாகாக் கல்வியை அறிவான்.
86. தமிழைக்கற்றவன் சாகாக்கால், வேகாத்தலை, போகாப்புனலை அறிவான்.
87. தமிழைக்கற்றவன் இயற்கையையும், செயற்கையையும் அறிவான்.
88. தமிழைக்கற்றவன் மும்மலத்தை அறிவான்.
89. தமிழைக்கற்றவன் மும்மலமே உடல்மாசுக்கு காரணம் என்பதை அறிவான்.
90. தமிழைக்கற்றவன் மும்மலத்தை நீக்கி நின்மலன் ஆவான்.
91. தமிழைக்கற்றவன் மும்மலமே மனமாசுக்கு காரணம் என்பதை அறிவான்.
92. தமிழைக்கற்றவன் மும்மலத்தை அறுப்பான்.
93. தமிழைக்கற்றவன் ஐம்புலனை அறிவான்.
94. தமிழைக்கற்றவன் ஐம்புலனை அடக்குவான்.
95. தமிழைக்கற்றவன் தனித்தலைவன் ஆவான்.
96. தமிழைக்கற்றவன் தலைவனை அறிவான்.
97. தமிழைக்கற்றவன் தலைவனை தம்முள் காண்பான்.
98. தமிழைக்கற்றவன் தலைவனே தாம் என்றறிவான்.
99. தமிழைக்கற்றவன் அன்புதான் சிவம் என்பதை அறிவான்.
100. தமிழைக்கற்றவன் ஆக்கத்தில் அழிவை அறிவான்.
101. தமிழைக்கற்றவன் அழிவில் ஆக்கத்தைக் காண்பான்.
102. தமிழைக்கற்றவன் அறிவை வளர்த்துக் கொள்வான்.
103. தமிழைக்கற்றவன் தம்உயிர் தாயின் உயிர் என்றறிவான்.
104. தமிழைக்கற்றவன் பெண்ணினுள் ஆணைக் காண்பான்.
105. தமிழைக்கற்றவன் பக்தியின் பெயரால் சடங்குகள் செய்யான்.
106. தமிழைக்கற்றவன் மற்ற உயிர்களுக்கு மகிழ்வு உண்டுபண்ணுவதே உண்மை ஆன்மீகம் என்று அறிவான்.
107. தமிழைக்கற்றவன் அருளை வளர்க்க அறிந்துகொள்வான்.
108. தமிழைக்கற்றவன் அருளே கருணை என்பதை அறிந்துகொள்வான்.
109. தமிழைக்கற்றவன் புலால் உண்ணமாட்டான்.
110. தமிழைக்கற்றவன் புலால் உண்பது பாவம் என்பதை அறிவான்.
111. தமிழைக்கற்றவன் உயிர்க்கொலை செய்யமாட்டான்.

112. தமிழைக்கற்றவன் உயிர்க்கொலை செய்ய துணை நிற்கமாட்டான்.
113. தமிழைக்கற்றவன் எல்லா உயிர்களுக்கும் தாய்போல் நடந்துகொள்வான்.
114. தமிழைக்கற்றவன் பிற உயிர்களுக்கு பாதுகாவலனாக இருப்பான்.
115. தமிழைக்கற்றவன் எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணுவான்.
116. தமிழைக்கற்றவன் உயிர்களுக்கு செய்யும் தொண்டே சிவதொண்டு என்றறிவான்.
117. தமிழைக்கற்றவன் மென்மைக்குள் திண்மையைக் காண்பான்.
118. தமிழைக்கற்றவன் கூற்றுவனை வெல்வான்.
119. தமிழைக்கற்றவன் கூற்றுவன் என்றறிவான்.
120. தமிழைக்கற்றவன் குணக்கேடுகளை அறிவான்.
121. தமிழைக்கற்றவன் குணக்கேடுகளை நீக்கிக் கொள்வான்.
122. தமிழைக்கற்றவன் தமிழ்மொழியை கடவுள் என்றறிவான்.
123. தமிழைக்கற்றவன் தமிழே ஞானம் என்றறிவான்.
124. தமிழைக்கற்றவனே கூற்றுவனை வெல்லும் மார்க்கம் தமிழில் உள்ளது என்பதை அறிவான்.
125. தமிழைக்கற்றவன் தமிழ்தான் அனைத்து வல்லமையும் தரும் என்பதை அறிவான்.
126. தமிழைக்கற்றவன் தமிழே வேதம் என்றறிவான்.
127. தமிழைக்கற்றால் தமிழே அமிழ்தம் என்றறிவான்.
128. தமிழைக்கற்றவன் தமிழே அமிழ்தம் என்றறிவான்.
129. தமிழைக்கற்றவன் தமிழ்தான் ஞானத்துக்கு உரிய கருவி என்றறிவான்.
130. தமிழைக்கற்றவன் தமிழே பிறப்பறுக்கும் மொழி என்று அறிவான்.
131. தமிழைக்கற்றவன் தமிழே பிறப்பறுக்கும் மொழி என்று அறிவான்.
132. தமிழைக்கற்றவன் தமிழே பிறப்பறுக்கும் மாமருந்து என்பதை அறிவான்.
133. தமிழைக்கற்றவன் தமிழ்தான் அகத்தீசன் என்பதை அறிவான்.
134. தமிழைக்கற்றவன் பேராசைதான் பிறவிக்கு காரணம் என்றறிவான்.

135. தமிழைக்கற்றவன் களிம்பற்றவன் திருவடியை பற்றிக்கொள்வான்.
136. தமிழைக்கற்றவன் களிம்பற்றிட களிம்பற்றவன் திருவடியை நாடுவான்.
137. தமிழைக்கற்றவன் களிம்பற்றவன் திருவடியை பற்றுவதே சிறப்பறிவு என்பதை அறிவான்.
138. தமிழைக்கற்றவன் வள்ளுவன் உடல் உயிரின் மாசை நீக்கினவன் என்பதை அறிவான்.
139. தமிழைக்கற்றவன் வள்ளுவனை சிவம் என்றறிவான்.
140. தமிழைக்கற்றவன் வள்ளுவன் திருவடியே துணை என்றறிவான்.
141. தமிழைக்கற்றவன் வள்ளுவன் கொண்டு கூற்றுவனை வெல்லுவான்.
142. தமிழைக்கற்றவன் அறம், பொருள், இன்பம், வீடு அறிவான்.
143. தமிழைக்கற்றவன் அறம், பொருள், இன்பம், வீடு அறிய வள்ளுவன் துணையை நாடுவான்.
144. தமிழைக்கற்றவன் வள்ளுவன் திருவடியே கூற்றுவனை வெல்லும் வல்லமை தரும் என்பதை அறிவான்.
145. தமிழைக்கற்றவன் வள்ளுவனே முற்றுப்பெற்ற முனிவன் என்பதை அறிவான்.
146. தமிழைக்கற்றவன் வள்ளுவனே பாவத்தைப் போக்கும் பரம்பொருள் என்பதை அறிவான்.
147. தமிழைக்கற்றவன் வள்ளுவனே பரம்பொருள் என்பதை அறிவான்.
148. தமிழைக்கற்றவன் திருக்குறள் கடவுளால் செய்யப்பட்டது என்பதை அறிவான்.
149. தமிழைக்கற்றவன் திருமூலதேவனை அறிவான்.
150. தமிழைக்கற்றவன் திருமந்திரத்தை அறிவான்.
151. தமிழைக்கற்றவன் இராமலிங்க சுவாமிகளே பரபிரம்மம் என்பதை அறிவான்.
152. தமிழைக்கற்றவன் அகத்தீசன் பெருமையை அறிவான்.
153. தமிழைக்கற்றவன் அகத்தீசன் திருவடியை போற்றுவான்.
154. தமிழைக்கற்றவன் அகத்தீசன் திருவடியை போற்றி பிறப்பற்று இருப்பான்.

155. தமிழைக்கற்றவன் திருவடி பூஜையே தெய்வமாக்கும் என்று அறிவான்.

156. தமிழைக்கற்றவன் திருவடியே விடுபேறு தரும் என்பதை அறிவான்.

157. தமிழைக்கற்றவன் அகத்தீசரை பூஜித்து கூற்றுவனை வெல்லுவான்.

158. தமிழைக்கற்றவன் திருஞானசம்பந்தரை அறிவான்.

159. தமிழைக்கற்றவன் திருநாவுக்கரசரை அறிவான்.

160. தமிழைக்கற்றவன் மாணிக்கவாசகரை அறிவான்.

161. தமிழைக்கற்றவன் திருஞானசம்பந்தர் திருவடியை பூஜிப்பான்.

162. தமிழைக்கற்றவன் திருநாவுக்கரசர் திருவடியை பூஜித்து அருளைப் பெற்றுக்கொள்வான்.

163. தமிழைக்கற்றவன் மாணிக்கவாசகர் திருவடியை பூஜித்து ஆசிபெற்றுக்கொள்வான்.

164. தமிழைக்கற்றவன் பதஞ்சலி முனிவர் ஆசிபெற்றுக்கொள்வான்.

165. தமிழைக்கற்றவன் நின்மலன் திருவடியை பற்றிக்கொள்வான்.

166. தமிழைக்கற்றவன் நின்மலன் ஆவான்.

167. தமிழைக்கற்றவன் அணுவில் அணுவைக் காண்பான்.

168. தமிழைக்கற்றவன் அணுவில் அண்டத்தைக் காண்பான்.

169. தமிழைக்கற்றவன் பிண்டத்துள் அண்டத்தைக் காண்பான்.

170. தமிழைக்கற்றவன் அண்டத்துள் பிண்டத்தைக் காண்பான்.

171. தமிழைக்கற்றவன் அண்டகோடிகளையும் நொடியில் அறிவான்.

172. தமிழைக்கற்றவன் அண்டகோடிகளையும் இங்கிருந்தே பார்ப்பான்.

173. தமிழைக்கற்றவன் அண்டகோடிகளை ஆள்வான்.

174. தமிழைக்கற்றவன் அண்டகோடிகளையும் நொடியில் சுற்றிவருவான்.

175. தமிழைக்கற்றவன் அண்டகோடிகளையும் பந்தென விளையாடுவான்.

176. தமிழைக்கற்றவன் அண்டகோடிகளையும் ஆட்டிப் படைப்பான்.

177. தமிழைக்கற்றவன் அண்டகோடிகளையும் தம்முள் காண்பான்.

178. தமிழைக்கற்றவன் பலகோடி மைல்களுக்கு அப்பால் எடுத்தல் கொடுத்தல் செய்வான்.

179. தமிழைக்கற்றவன் எந்தக் கருவியும் இல்லாமல் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்கள் பேசுவதைக் கேட்கலாம். நாம் அவர்களிடம் பேசலாம்.

180. தமிழைக்கற்றவன் பலகோடி மைல்களுக்கு அப்பாலுள்ள சுவையை அறிவான்.

181. தமிழைக்கற்றவன் கூடுவிட்டு கூடுபாயும் வல்லமை பெறுவான்.

182. தமிழைக்கற்றவன் பஞ்சபூதத்தையும் தம்முள் அறிவான்.

183. தமிழைக்கற்றவன் பஞ்சபூதத்தையும் அடக்கி ஆள்வான்.

184. தமிழைக்கற்றவன் பஞ்சபூதத்தையும் ஏவல் செய்வான்.

185. தமிழைக்கற்றவன் ஐந்தொழிலையும் செய்வான்.

186. தமிழைக்கற்றவன் பலகோடி யுகங்கள் வாழ்வான்.

187. தமிழைக்கற்றவன் அனைத்தையும் செய்யும் வல்லவன் ஆவான்.

188. தமிழைக்கற்றவன் விந்துவே ஆன்மா என்றறிவான்.

189. தமிழைக்கற்றவன் ஆன்மாவே விந்தென்று அறிவான்.

190. தமிழைக்கற்றவன் ஜீவான்மா பரமான்வை அறிவான்.

191. தமிழைக்கற்றவன் ஜீவான்மாவே பரமான்வா என்பதையறிவான்.

192. தமிழைக்கற்றவன் ஜீவான்மா பரமான்மாவை தம்முள் காண்பான்.

193. தமிழைக்கற்றவன் பிற ஆன்மாவிற்கு செய்யும் உதவியே தமது ஆன்மாவிற்கு ஆக்கம்தரும் என்பதை அறிவான்.

194. தமிழைக்கற்றவன் ஆன்மாவின் இயல்பை அறிவான்.

195. தமிழைக்கற்றவன் ஆன்மாவே ஆன்மஜோதியாக உள்ளதை அறிவான்.

196. தமிழைக்கற்றவன் ஆன்மாவே மனம் என்று அறிவான்.

197. தமிழைக்கற்றவன் ஆன்மாவே அறிவென்று அறிவான்.

198. தமிழைக்கற்றவன் விந்துநாதத்தை அறிவான்.

199. தமிழைக்கற்றவன் நாதவிந்துவை அறிவான்.

200. தமிழைக்கற்றவன் நாதவிந்துவே ஆதி என்று அறிவான்.

201. தமிழைக்கற்றவன் விந்துவை மணியாக்கிக்கொள்வான்.

202. தமிழைக்கற்றவன் பிரம்மத்தை அறிவான்.
203. தமிழைக்கற்றவன் பிரம்மம் ஆவான்.
204. தமிழைக்கற்றவன் ஆசையை அறிவான்.
205. தமிழைக்கற்றவன் ஆசையை அறுப்பான்.
206. தமிழைக்கற்றவனே நன்றி மறப்பது பாவம் என்று அறிவான்.
207. தமிழைக்கற்றவனே தன்னை வெல்லுவான்.
208. தமிழைக்கற்றவனே புலனை வெல்லுவான்.
209. தமிழைக்கற்றவனே தத்துவத்தை அறிவான்.
210. தமிழைக்கற்றவனே மூலக்கனலை அறிவான்.
211. தமிழைக்கற்றவன் காமக்கனலையும், மூலக்கனலையும் அறிவான்.
212. தமிழைக்கற்றவன் மூலக்கனலைக் கொண்டு காமக்கனலை வெல்லுவான்.
213. தமிழைக்கற்றவனே மூலக்கனலை எழுப்புவான்.
214. தமிழைக்கற்றவனே மூலக்கனல் கொண்டு தத்துவத்தை எரிப்பான்.
215. தமிழைக்கற்றவனே தத்துவ சேட்டையை அடக்குவான்.
216. தமிழைக்கற்றவனே சுத்த சன்மார்க்கத்தை அறிவான்.
217. தமிழைக்கற்றவன் ஆறாதார நிலையை அறிவான்.
218. தமிழைக்கற்றவன் 51 அட்சரத்தை அறிவான்.
219. தமிழைக்கற்றவன் குருவருளால் ஆசையை அறுக்கும் வல்லமை பெறுவான்.
220. தமிழைக்கற்றவன் குருவருளே முக்திக்கு வித்து என்பதை அறிவான்.
221. தமிழைக்கற்றவன் குருவருளால் பலகோடி பாவங்கள் தீரும் என்று அறிவான்.
222. தமிழைக்கற்றவன் குருவருளால் பாவத்தைப் போக்கும் வல்லமை பெறுவான்.
223. தமிழைக்கற்றவன் குருவருளால் பாவம் இல்லாத வாழ்வை அறிந்து வாழ்வான்.
224. தமிழைக்கற்றவன் குருவருளால் நல்வினையைப் பெருக்கிக்கொள்வான்.
225. தமிழைக்கற்றவன் குருவே சிவம் என்று அறிவான்.

226. தமிழைக்கற்றால்தான் எல்லாம்வல்ல கடவுளை அறிந்துகொள்ளவும், உண்மைப்பொருள் அறிந்த குருவை அறிந்துகொள்ளவும் முடியும்.

227. தமிழைக்கற்றவன் குருவே அகத்தீசன்தான் என்று அறிவான்.

228. தமிழைக்கற்றவன் குருவருளே சிறப்பறிவுதரும் என்பதை அறிவான்.

229. தமிழைக்கற்றவன் குருவருளால் திருவருள் பெறலாம் என்பதை அறிவான்.

230. தமிழைக்கற்றவன் குருவருள் அன்றி ஞானத்தை அடையமுடியாது என்பதை அறிவான்.

231. தமிழைக்கற்றவன் உண்மை குருவை அறிந்துகொள்வான்.

232. தமிழைக்கற்றவன் உண்மை குருவை அறிவான்.

233. தமிழைக்கற்றவன் ஆசானும் சீடனும் இரண்டறக் கலப்பதை அறிவான்.

234. தமிழைக்கற்றவன் சிவமே சிவஞானி அறிவான்.

235. தமிழைக்கற்றவன் முத்தேகத்தை அறிவான்.

236. தமிழைக்கற்றவன் உண்மைப்பொருளை அறிந்து மற்றவர்களுக்குப் போதிப்பான்.

237. தமிழைக்கற்றவன் நால்வகை யோனியின் கூறு அறிவான்.

238. தமிழைக்கற்றவன் எழுவகை பிறப்பை அறிவான்.

239. தமிழைக்கற்றவன் பலஜென்மத்தில் செய்த பாவத்தை தீர்க்கும் வல்லமை பெறுவான்.

240. தமிழைக்கற்றவன் அறுசுவையின் இயல்பை அறிவான்.

241. தமிழைக்கற்றவன் அழகில் விகாரத்தைக் காண்பான்.

242. தமிழைக்கற்றவன் அழகு காலத்தால் கெடும் என்பதை அறிவான்.

243. தமிழைக்கற்றவன் அழகு என்பது மாலை நேர மஞ்சள் வெயில்போல் என்பதை அறிவான்.

244. தமிழைக்கற்றவன் முக்குணத்தை அறிவான்.

245. தமிழைக்கற்றவன் எளிதில் தவத்தைப் பற்றி அறியலாம்.

246. தமிழைக்கற்றவன் வாலை பூஜைசெய்வான்.

247. தமிழைக்கற்றவன் இயற்கையை அறிவான்.

248. தமிழைக்கற்றவன் எல்லாம் கற்றவன் ஆவான்.

249. தமிழைக்கற்றவன் பரிணாம வளர்ச்சியின் இயல்பை அறிவான்.

250. தமிழைக்கற்றவன் மலரினும் மெல்லியது காமம் என்று அறிவான்.
251. தமிழைக்கற்றவன் பிரணவத்தை அறிவான்.
252. தமிழைக்கற்றவன் தன் தேகத்தை பிரணவ தேகமாக்கிக்கொள்வான்.
253. தமிழைக்கற்றவன் தன் குற்றங்களை தானே அறிவான்.
254. தமிழைக்கற்றவன் மூலப்புள்ளி, அமுரியை அறியலாம்.
255. தமிழைக்கற்றவன் பஞ்ச சக்தி தீட்சையை அறியலாம்.
256. தமிழைக்கற்றவன் காயசித்தியின் இரகசியத்தை அறியலாம்.
257. தோற்றம் இல்லாததும், இலக்கணத்திற்கு அப்பாற்பட்டதும் பரம்பொருளை அறியவேண்டும் என்றால் தமிழைக் கற்றால்தான் அறியமுடியும். எ.கா :

**என்னவென்று சொல்லுவேன் இலக்கணம் இலாததை**
**பன்னுகின்ற செந்தமிழ்ப் பதங்கடந்த பண்பென**
**மின்னகத்தில் மின்னொடுங்கி மின்னதான வாறுபோல்**
**என்னகத்துள் ஈசனும் யானும் அல்லதில்லையே.**

**சிவவாக்கியர் –90.**

258. தமிழைக் கற்கவேண்டும் என்று சொல்வதன் நோக்கமே மும்மலமற்ற ஆசான் அகத்தீசர் திருவடியைப் பற்றுவதற்கே.

ஆசான் ஞானபண்டிதனான தமிழ்க்கடவுள் சுப்ரமண்யராலும், ஆசான் அகத்தீசராலும் உருவாக்கப்பட்ட தமிழைப் படித்தலும், படிப்பித்தலும் புண்ணியமாகும். உண்மைப்பொருளான ஆசான் ஞானபண்டிதரால் உபதேசம் பெற்ற ஆசான் அகத்தீசரும் உருவாக்கிய இந்த தமிழில் உண்மைப்பொருள், தமிழைக் கற்பவர்கள் எளிதில் புரிந்துகொள்ள வேண்டும் என்றே தமிழைப் படைத்துள்ளார்கள்.

தமிழைப் படிக்கும்பொழுதும், படிப்பிக்கும்பொழுதும், பிறர் படிக்கச் கேட்கும்பொழுதும், பேசும்பொழுதும் ஆசான் ஞானபண்டிதனுடைய அருளும், ஆசான் அகத்தீசரின் அருளும் நமக்குக் கிடைப்பதால், தமிழைக்கற்று ஜென்மத்தைக்கடைத்தேற்ற அமைக்கப்பட்டதுதான் இந்த

தெய்வீகத் தமிழாகும். ஆகவே, தமிழைப் பழத்தலும், படிப்பித்தலும் ஆசான் ஞானபண்டிதருக்கும், அகத்தீசருக்கும் செய்யும் தொண்டாகும். எனவே, தமிழைக் கற்கவேண்டும் என்று இந்நூலில் தமிழைக்கற்றால் வரும் நன்மைக்ள என்ற தலைப்பில் கொடுத்துள்ளோம்.

இராமலிங்க சுவாமிகளும், தமிழ் என்ற ஒரு சொல்லுக்கு உரை அமைத்துள்ளார். மேலும், சிவபூஜா விதியைப் பாடிய மகான் தேரைய மகரிஷியும், தமிழைக் கற்பதே சிவபூஜையாகும் என்று பொருள் அமையும்படி சிவபூஜா விதியில் 66, 67, 68, 69 ஆகிய எண்ணுடைய கவிகளில் சொல்லியுள்ளார். எனவே, தமிழைக் கற்பதே சிவபூஜையாகும்.

தமிழ்மொழிக்கு இலக்கண நூல் தொல்காப்பியம் இன்னும் பல. எனவே, இந்த உலகம் தோன்றியபொழுதே தமிழும் தோன்றியது. யுகப்பிரளயம் ஏற்பட்டாலும் மீண்டும் புதிய உலகம் தோன்றும்பொழுது, தமிழ் அழியாது நின்ற எங்கும் வியாபித்த சிவமாகிய பரம்பொருளைப் பற்றி மீண்டும் தோன்றும் மக்களுக்கு உபதேச மொழியாக தமிழ் இருக்கும் என்றும், பரப்பிரம்மம் அழியாது. அதேபோல் என்றும் தமிழ் அழியாது.

தமிழ்மொழியைக் கற்றுதான் 9 கோடி சித்தர்களும் உண்மைப்பொருளாகிய பரம்பொருளை அடைந்துள்ளார்கள். இன்னும் வருங்காலத்தில் அநேக கோடி ஞானிகளும் தமிழைப் படித்துதான் ஞானியாகப் போகிறார்கள். வேறு எந்த மொழியிலும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு, மெய்ப்பொருளைப் பற்றி தமிழில் தான் உள்ளது. எனவே, தமிழே பரம்பொருளாகும், பரம்பொருளே தமிழாகும். மேலும்மேலும், உயிருக்கு உயிராக இருந்து உண்மைப்பொருளை உபதேசிக்கக் கூடியது தமிழ்தான்.

எல்லா அண்டங்களும் தமிழே! எல்லா உயிர்களும் தமிழே! எல்லா அனுபவங்களும் தமிழே! எல்லா ஞானங்களும் தமிழே! எனவே உலகம் என்றாலே தமிழ்தான். இதைப்படித்தால்தான் தூல சூட்சுமமாகிய சத், அசத்தை அறிந்துகொள்ள முடியும். சத், அசத்தை அறிவதற்கு தமிழைக்கற்க வேண்டும்.

தமிழில்தான் திருமந்திரம், திருவாசகம், திருக்குறள், திருஅருட்பா, தேவாரம், வைணவநூல்கள் இன்னும் அநேக

சாஸ்த்திரங்களும், உண்மைப்பொருளை சொல்லியிருப்பதால், தமிழைக் கற்றால்தான் உண்மைப்பொருளை அறியமுடியும்.

திருமூலதேவர் அருளிய திருமந்திரமாகிய தமிழில் சிவனே சிவஞானி என்றும், குருவே சிவமென கூறினன் நந்தி என்றும், திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும் என்றும், திருவடியே சிவமாவது தேரில் என்றும் சொல்லியிருப்பதால், உண்மைப்பொருளை அறிந்த ஆசான் திருமூலதேவரை அறிந்துகொள்ளவும், அவரால் உபதேசிக்கப்பட்ட திருமந்திரத்தை கற்று அறியவும் தமிழைக் கற்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மைப்பொருளை அறிய முடியும். தமிழைக் தெளிவாகக் கற்றுக்கொண்டால்தான் திருமந்திரத்தைப் படிக்கவும், அதிலுள்ள நுட்பத்தை அறியவும் முடியும். அதனால்தான் தமிழைக்கற்க வேண்டும் என்ற தலைப்பில் இந்த சிறிய நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழைப் படித்தால்தான் திருமந்திரம், திருவாசகம், திருக்குறள், திருஅருட்பா போன்ற இன்னும்பல நூல்களில் உள்ள நுட்பங்களை அறியமுடியும்.

ஆகவே, தமிழைக்கற்றால் உண்மைப்பொருளை அறியலாம். மேலும், வீடுபேறு அடைய விரும்புகிறவர்கள் தமிழைக் கற்கவேண்டும்.

இடைபிங் கலையின எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமுங் காட்டுவது தமிழ்.

இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டுவது தமிழ்.

சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளுவது தமிழ்.

என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தது தமிழ்.

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டுவது தமிழ்.

சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டுவது தமிழ்.

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டுவது தமிழ்.

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பது தமிழ்.

பரமானந்த சதாசிவ சற்குரு

## தவத்திரு. ரெங்கராஜதேசிக சுவாமிகள்

அவர்கள் அரளிய

## ஆசான் அகத்தீசனை பூஜித்தால் வரும் நன்மைகள்

1. வறுமையில்லா வாழ்வுபெற அகத்தீசனை பூஜிப்போம்.
2. நோயில்லா வாழ்வுபெற அகத்தீசனை பூஜிப்போம்.
3. கடன்சுமை தீர அகத்தீசனை பூஜிப்போம்.
4. கண்ணியமுடன் வாழ அகத்தீசனை பூஜிப்போம்.
5. குடும்பத்தில் ஒற்றுமைபெற அகத்தீசனை பூஜிப்போம்.
6. கல்வியில் வெற்றிபெற அகத்தீசனை பூஜிப்போம்.
7. வேலைவாய்ப்பு அமைந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
8. குடும்பநலம்பெற அகத்தீசனை பூஜிப்போம்.
9. திருமணத்தடை நீங்க அகத்தீசனை பூஜிப்போம்.
10. பண்புள்ள புத்திரபாக்கியம்பெற அகத்தீசனை பூஜிப்போம்.
11. ஜாதி துவேசம் நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
12. சொந்தவீடு அமைந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
13. விவசாயம் சிறந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
14. வியாபாரம் சிறந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
15. செல்வம் பெருகிட அகத்தீசனை பூஜிப்போம்.
16. உத்தியோகத்தடை நீங்க அகத்தீசனை பூஜிப்போம்.
17. பகைமை நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
18. பகைமையில்லா வாழ்வுபெற அகத்தீசனை பூஜிப்போம்.
19. நல்லநட்பு பெருகிட அகத்தீசனை பூஜிப்போம்.
20. தீயநட்பு நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

21. துன்பம் நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
22. நன்மைபெருகிட அகத்தீசனை பூஜிப்போம்.
23. நலம் பெருகிட அகத்தீசனை பூஜிப்போம்.
24. தீமை நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
25. அகந்தையற்று வாழ்ந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
26. திடம் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
27. நல்ல மனைவி அமைந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
28. நல்ல கணவன் அமைந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
29. ஊக்கமுடன் வாழ அகத்தீசனை பூஜிப்போம்.
30. ஏக்கம் நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
31. ஏற்றம் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
32. என்றும் வாழ்ந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
33. ஆபத்து நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
34. அன்புடன் வாழ அகத்தீசனை பூஜிப்போம்.
35. பண்புடன் வாழ அகத்தீசனை பூஜிப்போம்.
36. நல்மனம் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
37. நன்னெறி கடைப்பிடித்திட அகத்தீசனை பூஜிப்போம்.
38. பிறரை மதித்து வாழ அகத்தீசனை பூஜிப்போம்.
39. பெருந்தன்மை பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
40. தன்னலம் நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
41. பொதுநலம் போற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
42. தயவுடன் வாழ அகத்தீசனை பூஜிப்போம்.
43. மேலான வாழ்வுபெற அகத்தீசனை பூஜிப்போம்.
44. சொல்வண்ணம் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
45. சோர்வின்றி வாழ்ந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
46. தாழ்வில்லா வாழ்வுபெற அகத்தீசனை பூஜிப்போம்.
47. நற்குணம் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
48. நல்லவனாகிட அகத்தீசனை பூஜிப்போம்.
49. பொதுத்தொண்டு செய்திட அகத்தீசனை பூஜிப்போம்.
50. பொய்ப்பேசா வாழ்வுபெற அகத்தீசனை பூஜிப்போம்.
51. பொறாமை நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
52. பேராண்மைப் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
53. இன்சொற்கள் பேச அகத்தீசனை பூஜிப்போம்.
54. இன்பமுடன் வாழ அகத்தீசனை பூஜிப்போம்.
55. விட்டுக்கொடுத்து வாழ அகத்தீசனை பூஜிப்போம்.
56. மன்னிக்கும் குணம்பெற அகத்தீசனை பூஜிப்போம்.

57. மனம்விட்டுப் பழகிட அகத்தீசனை பூஜிப்போம்.

58. நன்றிமறவாது இருந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

59. பிறர்செய்த நன்றியை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

60. நற்றமிழ் பேசிட அகத்தீசனை பூஜிப்போம்.

61.நற்றமிழ் வளர்த்திட அகத்தீசனை பூஜிப்போம்.

62. குடிப்பழக்கம் நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

63. சூதாடும் பழக்கம் நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

64. பணிவுடன் வாழ அகத்தீசனை பூஜிப்போம்.

## யோக, ஞானம்

1. சிந்தை தெளிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
2. சிவனை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
3. நாமே சிவமாகிட அகத்தீசனை பூஜிப்போம்.
4. உயிரையும் உடம்பையும் சேர்த்திட அகத்தீசனை பூஜிப்போம்.
5. உடல்மாசு நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
6. ஒளிதேகம் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
7. உள்ஒளியைக் கண்டிட அகத்தீசனை பூஜிப்போம்.
8. ஒளியில் ஒடுங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
9. தவத்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
10. உடம்பினுள் புனிதத்திர்த்தம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
11. உடம்பே ஆலயம் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
12. ஆன்மாவை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
13. ஆன்மஜோதியைக் கண்டிட அகத்தீசனை பூஜிப்போம்.
14. அறிவே ஆன்மா என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
15. சத், அசத்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
16. சத்தை நிலைநாட்டிட அகத்தீசனை பூஜிப்போம்.
17. முக்குணம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
18. நிர்க்குணம் ஆகிட அகத்தீசனை பூஜிப்போம்.
19. நின்மலனை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
20. நின்மலன் ஆகிட அகத்தீசனை பூஜிப்போம்.
21. நிர்க்குணனை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
22. நிராமயனை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

23. போக்கும் வரவும் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
24. போக்கும் வரவும் அற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
25. அகத்தீசன் திருவடியே ஞானம் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
26. அமுதமே அகத்தீசன் என்பதை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
27. அமுதத்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
28. அமுதத்தை உண்டிட அகத்தீசனை பூஜிப்போம்.
29. உடம்பே அமுதம் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
30. உடம்பே அமுதமாகும் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
31. நஞ்சை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
32. நஞ்சை அமிழ்து ஆக்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
33. நெல்லினுள் பதரை அறிய அகத்தீசனை பூஜிப்போம்.
34. நெல்லினுள் பதரை நீக்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
35. தூலசூட்சமம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
36. அகத்தியர் திருவடியே வேதம் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
37. அகத்தியனே ஓங்காரம் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
38. அகத்தியரே நமது அறிவாகிட அகத்தீசனை பூஜிப்போம்.
39. அகத்தீசன் மனம்மகிழ அகத்தீசனை பூஜிப்போம்.
40. அகத்தீசன் ஆசிபெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
41. அகத்தியரே ஞானத்திற்குரிய அறிவு என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
42. அகத்தியரே அகமும் புறமும் இருந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
43. நாமே அதுவாகிட அகத்தீசனை பூஜிப்போம்.
44. அதுவே நாமாகிட அகத்தீசனை பூஜிப்போம்.
45. நாமே அகத்தீசனாகிட அகத்தீசனை பூஜிப்போம்.
46. நம்மை, அகத்தீசன் சீடனாக ஏற்க அகத்தீசனை பூஜிப்போம்.
47. தசநாதம் கண்டிட அகத்தீசனை பூஜிப்போம்.
48. ஐம்பூதம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

49. ஐம்பூதத்தை ஏவல் செய்ய அகத்தீசனை பூஜிப்போம்.

50. அகரம், உகரம், மகரம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

51. ஓங்காரம் கண்டிட அகத்தீசனை பூஜிப்போம்.

52. இடை, பின், சுழினை அறிய அகத்தீசனை பூஜிப்போம்.

53. சுழினை வாசலை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

54. சுழினை வாசலை திறந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

55. சுழினையில் அகத்தீசன் ஒடுங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

56. உடல்மாசை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

57. துரியநிலை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

58. துரியம் கடந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

59. ஜோதியைக் கண்டிட அகத்தீசனை பூஜிப்போம்.

60. ஜோதியே அகத்தீசன் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

61. பந்தபாசம் அற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.

62. பயமற்று வாழ்ந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

63. தூலமாசு நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

64. சூட்சமம் ஆக்கம்பெற அகத்தீசனை பூஜிப்போம்.

65. கலங்கம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

66. கலங்கம் நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

67. சத்தியம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

68. சத்தியமே அகத்தியம் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

69. அவன், அவள், அதுவை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

70. வாசியை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

71. வாசி வசப்பட அகத்தீசனை பூஜிப்போம்.

72. நவகோடி சித்தர்களின் ஆசிபெற அகத்தீசனை பூஜிப்போம்.

73. அஷ்டமா சித்திபெற அகத்தீசனை பூஜிப்போம்.

74. மூலக்கனலை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

75. மூலக்கனலை எழுப்பிட அகத்தீசனை பூஜிப்போம்.

76. ஆறாதாத்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

77. அவஸ்தை ஐந்து அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

78. அவஸ்தை ஐந்து நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

79. வித்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

80. வித்தினுள் வித்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

81. அடக்கத்துடன் வாழ அகத்தீசனை பூஜிப்போம்.

82. ஆராவாரமின்றி வாழ அகத்தீசனை பூஜிப்போம்.

83. காரசாரம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

84. காரசாரத்தால் தேகம் கனகமாகிட அகத்தீசனை பூஜிப்போம்.

85. அண்டகோடிகளும் கண்டிட அகத்தீசனை பூஜிப்போம்.

86. அண்டகோடிகளுக்கும் சென்றுவர அகத்தீசனை பூஜிப்போம்.

87. ஐந்தொழிலும் செய்திட அகத்தீசனை பூஜிப்போம்.

88. ஐந்தொழிலே அகத்தீசன் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

89. ஞானத்தை நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

90. வினைகள் சேராது இருக்க அகத்தீசனை பூஜிப்போம்.

91. பெருந்தன்மை பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.

92. பொருளின் இயல்பை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

93. பொருளால் ஜென்மத்தைக் கடைத்தேற்றலாம் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

94. ஐவண்ணம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

95. ஐவண்ணம் கண்டாருக்கு வறுமை இல்லை என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

96. மயம் ஐந்தும் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

97. மயானமே சுழிமுனை என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

98. கர்மேந்திரியம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

99. ஞானேந்திரியம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

100. உடல் கருவிகளை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

101. பாவியாகாது வென்றிட அகத்தீசனை பூஜிப்போம்.

102. காலனை வென்றிட அகத்தீசனை பூஜிப்போம்.

103. அறியாமை நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

104. உண்மைப்பொருளை அறிய அகத்தீசனை பூஜிப்போம்.

105. நான், எனது என்னும் பற்று நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

106. மெய்ப்பொருளை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

107. தன்னை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
108. அகத்தீசனை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
109. அகத்தீசன் அருள்பெற அகத்தீசனை பூஜிப்போம்.
110. அருளைத் தெரிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
111. அருளைப் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
112. புனிதனாக வாழ்ந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
113. பொய்யை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
114. காமவிகாரம் அற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
115. காமத்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
116. காமத்தை வென்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
117. விதியை வென்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
118. விவேகம் பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
119. வஞ்சகம் அற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
120. உடம்பை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
121. உயிரை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
122. தலைவனை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
123. தலைவன் ஆகிட அகத்தீசனை பூஜிப்போம்.
124. பிரம்மத்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
125. பிரம்மம் ஆகிட அகத்தீசனை பூஜிப்போம்.
126. நல்வினை, தீவினை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
127. நல்வினையைப் பெருக்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
128. பிறப்பை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
129. பிறப்பற்று இருந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
130. மும்மலம் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
131. மும்மலம் அற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
132. சாகாக்கல்வியை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
133. சாகாக்கால் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
134. போகாப்புலன் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
135. விந்துவை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
136. விந்து மணியாகிட அகத்தீசனை பூஜிப்போம்.
137. இரவு பகல் அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
138. இரவைப் பகலாக்கிட அகத்தீசனை பூஜிப்போம்.
139. கடுந்தவம் செய்திட அகத்தீசனை பூஜிப்போம்.
140. மாயையை வென்றிட அகத்தீசனை பூஜிப்போம்.
141. மாயையை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
142. காயத்தை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

143. காயசித்தி பெற்றிட அகத்தீசனை பூஜிப்போம்.

144. இயற்கையை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

145. இயற்கையை வென்றிட அகத்தீசனை பூஜிப்போம்.

146. ஐம்புலனை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

147. ஐம்புலனை வென்றிட அகத்தீசனை பூஜிப்போம்.

148. சிலம்பொலி கேட்டிட அகத்தீசனை பூஜிப்போம்.

149. ஓம்கார, ரீங்காரம் கேட்டிட அகத்தீசனை பூஜிப்போம்.

150. திரை ஏழும் நீங்கிட அகத்தீசனை பூஜிப்போம்.

151. திரை ஏழும் தெரிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

152. மோனநிலை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

153. சமாதியே மோனம் என்பதை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

154. சும்மா இருந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

155. சும்மாயிரு என்ற சொல்லை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

156. நாட்டத்தைப்பற்றி நடுவனைச் சார்ந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

157. வெட்டவெளிதனைக் கண்டிட அகத்தீசனை பூஜிப்போம்.

158. வெட்டவெளியில் தோய்ந்திட அகத்தீசனை பூஜிப்போம்.

## மெய்மொழிகள்

1. பசித்த ஏழைகளுக்கு பசியாற்றும் எண்ணம் வேண்டும் என்று அகத்தீசனை பூஜிப்போம்.
2. பக்தியே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
3. முக்தி அடைய உடம்பே கருவி என்று அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
4. மெய்யுள் மெய்யை அறிந்தவன் மெய்யாவான் என்பதை அறிந்திட அகத்தீசனை பூஜிப்போம்.
5. ஒருகோடி தவத்தை ஒரு நொடியில் செய்யலாம். அது எது என்றால் ஓம் அகத்தீஸ்வரா! நாயினும் கடையேனாகிய என்னையும் ஒருபொருட்டாக மதித்து அருள்புரிய வேண்டும் என்று அகத்தீசரை வேண்டுவதே ஒருகோடி தவம் செய்வதற்கு ஒப்பாகும். இப்படி வேண்டி பூஜிப்பவரே வீடுபேறு அடைவார்.

ஒருகோடி ஆகம வேதங்களைப் படித்து, அறிந்து அடையமுடியாத ஞானத்தை இந்த ஒரு வேண்டுகோளிலேயே அடையலாம்.

ஒன்றான மனமல்லோ சற்குருவின்பூசை
 ஒருகோடி தவஞ்செய்வோர் தமக்குவாய்க்கும்
நன்றான ஆத்துமதத்துவ மிருபத்துநாலும்
 நலமான குருவுக்குத் தோற்றப்பண்ணும்
சென்றாடும் வாசியிலே சின்மயத்தில்
 தேவிதாய் மனங்குளிரப் பூசைபண்ணு
கன்றாமற் பின்கலையிற் பிதிர்சூட்சஞ்செய்வாய்
 காரணமாம் நந்திகுரு வாகுங்காணே.

**அகத்தியர் பூஜாவிதி 200–ல் கவி : 102.**

சொன்னபடி யின்னமொரு சேதிசொல்வேன்
 சோதியினி லேதினமுந் துடர்ந்துயேறு
என்னபடித் தாலுங்குரு வில்லாச்சீடன்
 என்னயிர யோசனமா மலைந்துசாவான்
பொன்னதனைக் கம்மாளர் உருக்கினாற்போல்
 புருவநடுத் தமர்திறக்க இருகண்பூட்டு
கொன்றுவிடுங் கருவியெல்லாஞ் சணத்தில்மாளும்
 கூத்தன்நின்ற சுழினைதனைத் திறமாய்க்காணே.

**அகத்தியர் ஞான சைதன்யம் 51–ல் கவி : 4.**

சாவதுதா னெதினாலே வந்துதென்றால்
 சண்டாள மனம்நிலைக்காத் தோசத்தாலே
ஆவதுவு மழிவதுவும் விந்தாலப்பா
 ஆச்சரியம் பாழ்குழியி னாசையாலே
காவலது கட்டழிந்து போனதாலே
 காட்சியெல்லாம் பொய்யாச்சு கண்டுபாரு
பாவதுவுஞ் சுண்ணாம்பி லொட்டினாப்போல்
 பரமகுரு பீடமதைப் பகுத்திடாயே.

**அகத்தியர் ஞான சைதன்யம் 51–ல் கவி : 17**

பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு. **ரெங்ராஜ தேசிக சுவாமிகள்**

அவர்கள் அருளிய

# உபதேசம்

## நன்னெறி மார்க்கம்

01. ஜீவகாருண்யம் உள்ளவர்களுக்கு ஜாதி வெறி இல்லை. ஜாதிவெறி உள்ளவர்களிடம் ஜீவகாருண்யம் இல்லை.

02. பிறரை மதிப்பவர் தன்னை மதிப்பார். தன்னை மதிப்பவர் பிறரை மதியார்.

03.குற்றத்தை காண்பவர் நட்பை வளர்க்கார். நட்பை வளர்ப்பவருக்கு குற்றங்கள் தெரியாது.

04. பொறாமை உள்ளவனுக்கு வாழ்வே நரகம்.

05. வருவாய்க்கு தக்க செலவினன் வாழக்கற்றுக்கொண்டவன்.

06. நாவை அடக்கினவன் நல்லவன் ஆவான்.

07. பிறரை அனுசரித்து வாழ்பவன் நட்பை பெருக்குவான்.

08. இனிமையாக பேசுபவன் இனியன் ஆவான்.

09. கடுஞ்சொற்கள் பேசுபவன் நாட்டில் இருந்தாலும், காட்டில் இருப்பவனே.

10. விருந்தை போற்றுபவன் சிறந்த அறிவாளி.

11. தாய் தந்தையைப் போற்றுபவன் நன்றியுள்ளவன் ஆவான்.

12. நன்றியை மறவாதவன் நல்லவன் ஆவான்.

13. குற்றத்தை மன்னிப்பவன் குணவான் ஆவான்.

14. குற்றத்தைப் பார்ப்பவன் நட்பைப் பெருக்கான்.

15. கடுஞ்சொற்கள் பேசுபவனுக்கு கசப்பான வாழ்வு.

16. அன்புடைய மனைவி கையால் வடித்த கஞ்சி உண்டாலும் அமிழ்தத்திற்கு ஒப்பாகும்.

17. அன்பில்லா மனைவி கையில் அமிழ்தமே உண்டாலும் நஞ்சுக்கு ஒப்பாகும்.

18. நீதியில்லாதவனே ஜாதியை வகுத்திட்டான்.

19. சோம்பல் உள்ளவன் வெற்றி காணமாட்டான்.

20. அளந்து செலவு செய்பவன் அறிவுடையவன் ஆவான்.

21. விருந்தை உபசரிப்பவன் நட்புடன் வாழ்வான்.

22. அறிந்து செய்யும் உதவியே அறிவுடைமை ஆகும்.

23. பிறரை கண்ணீர்விடச் செய்தவனே கண்ணீர் விடுவான்.

24. நல்லவன் என்பவனே வல்லவன் ஆவான்.
25. முயற்சி உடையான் தளர்ச்சி அடையான்.
26. ஒப்புரவாளனே உயர்ந்தவன் ஆவான்.
27. வாழ்வை அறிந்தவன் தாழ்வு அடையான்.
28. பகையில்லா வாழ்வு பண்பாண் வாழ்வு.
29. சுயநலமில்லாதவனே பிறர்நலம் விரும்புவான்.
30. பகுத்து உண்பதே பண்பதாகும்.
31. அளந்து உண்பதே ஆரோக்கியமாகும்.
32. தன்னை மதிப்பவன் பிறரை மதியான்.
33. தன்னை அறிவாளி என்று நினைப்பவன் பிறரை முட்டாள் என்று நினைப்பான்.
34. பகைமை இல்லாத வாழ்வே தகைமையான வாழ்வு.

## யோக, ஞானம்

01. அகத்தீசனை அறிவதே உண்மை அறிவாகும்.
02. உண்மை என்பதே அகத்தீசன் திருவடியாகும்.
03. மோட்சம் தருவது அகத்தீசன் திருவடியே.
04. முன்வினைகளைத் தீர்ப்பதும் அகத்தீசன் திருவடியே.
05. வறுமையை தீர்ப்பது அகத்தீசன் திருவடியே.
06. நல்வாழ்வு தருவது அகத்தீசன் திருவடியே.
07. பொறுமையை தருவது அகத்தீசன் திருவடியே.
08. புனிதன் ஆக்குவதும் அகத்தீசன் திருவடியே.
09. பொல்லாப்பை அகற்றுவதும் அகத்தீசன் திருவடியே.
10. போதம் தருவதும் அகத்தீசன் திருவடியே.
11. மெய்ப்பொருளை உணர்த்துவதும் அகத்தீசன் திருவடியே.
12. மெய்ஞானம் தருவதும் அகத்தீசன் திருவடியே.
13. கள்ளம் அகற்றுவதும் அகத்தீசன் திருவடியே.
14. கண்ணியம் தருவதும் அகத்தீசன் திருவடியே.
15. காலனை வெல்லுவதும் அகத்தீசன் திருவடியே.
16. கனிவை தருவதும் அகத்தீசன் திருவடியே.
17. காலத்தை வெல்லுவதும் அகத்தீசன் திருவடியே.
18. காட்சி தருவதும் அகத்தீசன் திருவடியே.
19. மும்மலத்தை அறுப்பதும் அகத்தீசன் திருவடியே.
20. பக்தி தருவதும் அகத்தீசன் திருவடியே.

21. பாவத்தைப் போக்குவதும் அகத்தீசன் திருவடியே.

22. ஊழ்வினையை அறுப்பதும் அகத்தீசன் திருவடியே.

23. ஊழ்வினையை அறிவதும் அகத்தீசன் திருவடியே.

24. பேராசை உள்ளவன் பாவியாவான்.

25. அகத்தீசரை பூஜித்தால் சினம் அடங்கும்.

26. பொல்லாத காமமே பிறவிக்கு காரணம்.

27. பிறவிக்கு காரணம் மும்மலமே.

28. மும்மலம் அற்றால் பிறவி அற்றுவிடும்.

29. அகத்தீசர் பூஜையால் அறச்சிந்தை வரும்.

30. அருளை விரும்பினால் பொருள்பற்று இருக்காது.

31. அருளைப்போற்றினால் அறியாமை நீங்கும்.

32. அருளைப் போற்றினால் செல்வம் பெருகும்.

33. சுழிமுனையை அறிந்தவன் உண்மையை அறிந்தவன் ஆவான்.

34. மும்மல தேகமே அறியாமைக்கு காரணம்.

35. அசுத்த தேகமே மனமாசுக்கு காரணம்.

36. ஆசை அற்றவருக்கு ஈசனை காட்டும் உடம்பு.

37. உடம்பே சிவலிங்கம் என்பது உண்மை அறிவாகும்.

38. உடம்பே சிதம்பரம் என்பது சிறப்பறிவாகும்.

39. உடம்பை அறிந்தவர் சதாசிவத்தை அறிவார்.

40. நெற்றியின் நடுவே சிதம்பர நடனம் காண்பவன் சிறப்பறிவாளன்.

41. மெய்யை அறிந்தவன் பொய்யை அறிவான்.

42. பொய்யை மெய் என்பவன் மூடன் ஆவான்.

43. தவத்தை அறிந்தவனுக்கு காடென்ன, வீடென்ன இரண்டும் ஒன்றே.

44. அனைத்தையும் சிவமாக பார்ப்பவர் மெய்யறிவாளர்.

45. பாவ புண்ணியத்தை அறிவதே சிறப்பறிவாகும்.

46. நரகத்தையும், சொர்க்கத்தையும் தம்முள் கண்டவர் உண்மையைக் கண்டவர் ஆவார்.

47. தம்முள் புனித தீர்த்தம் அறிந்தவர், புனித தீர்த்தம் வெளியில் தேடார்.

48. புனித தீர்த்தம் வெளியில் இருப்பதாக அறிந்தவன் தம்முள் உள்ள தீர்த்தத்தை அறிவான்.

49. உண்மைப்பொருளை அறிந்தவன் சிலா விக்ரகங்களை போற்றான்.

50. ஐம்புலனை வென்றவன் வீரன் ஆவான்.

51. காமத்தைக் கட்டினவன் கடவுள் ஆவான்.

52. நாமே சிவம் என்றறிவது சிறப்பறிவாகும்.

53. கல்வியில் சிறந்தது சாகாக் கல்வியே.

54. சாகாக்கால் அறிந்தால் சாகாக் கல்வியை அறியலாம்.

55. வேகாத்தலை அறிந்தவன் போகாப்புலனை அறிவான்.

56. அநித்தியத்தை நித்தியம் என்பான் அறியாதவன் ஆவான்.

57. அநித்தியமும் நித்தியமும் அறிந்தவன் அறிவுள்ளவன் ஆவான்.

58. தன்னை அறியும் அறிவே தகைமையானதாகும்.

59. உடம்பை அறிந்தவன் உலகத்தை அறிவான்.

60. உலகத்தை அறிந்தவன் உடம்பை அறிவான்.

61. பொறிபுலனை அறியாதவனுக்கு காவி உடை அவசியமில்லை.

62. பொறிபுலனை அறிந்தவனுக்கு வெள்ளுடை தடையில்லை.

63. தம்மை அறிங்வதன் பஞ்ச பூதத்தை அறிவான்.

64. பஞ்ச பூதத்தை அறிந்தவன் தன்னை அறிவான்.

65. நாத விந்தை அறிந்தவன் நல்லவன் ஆவான்.

66. நாத விந்தை அறிந்தவன் வல்லவன் ஆவான்.

67. நன்றியை மறப்பவன் பாவி ஆவான்.

68. உண்மைபொருளை அறிந்தவன் ஆடம்பரம் விரும்பான்.

69. ஆடம்பரத்தை விரும்புகிறவன் உண்மைப் பொருளை அறியான்.

70. தவத்தை அறிந்தவன் சடங்குகளை நம்பான்.

71. சடங்குகளை நம்புபவன் தவத்தை அறியான்.

72. எல்லோரையும் கடவுளாக பார்ப்பவன் கடவுள் ஆவார்.

73. வாசி அறிந்தவன் தோஷத்தை நீக்குவான்.

74. வாசி அறிந்தவன் தேசி ஆவான்.

75. வாசி கட்டினவன் விந்தை கட்டுவான்.

76. விந்தை அறிந்தவன் விவேகி ஆவான்.

77. விந்தை கட்டினவன் கடவுள் ஆவான்.

78. தனிமையில் பூஜிப்பவன் தப்பித்துக்கொள்வான்.

79. அகத்தீசனை அறிந்தவன் அன்புனடயவன் ஆவான்.

80. அகத்தீசனை அறிந்தவன் கடவுளை அறிவான்.

81. பரம்பொருளை அறிந்தவன் பரம்பொருள் ஆவான்.

82. ஜீவதயவு உள்ளவனே கடவுள் ஆவான்.

83. ஜீவதயவு இல்லாதவன் கடவுளை அறியான்.

84. கடவுள் என்பதே ஜீவதயவு ஆகும்.

85. நித்தியத்தை அறிந்தவன் நித்தியன் ஆவான்.

86. ஒன்றுள் ஒன்றை அறிவது உண்மை அறிவாகும்.

87. பொறிப்புலனை அறிந்தவன் புண்ணியவான் ஆவான்.

88. அறியவேண்டியவற்றை அறிந்தவன் ஐம்புலனை அடக்கவேண்டாம்.

89. அறிய வேண்டியவற்றை அறியாதவன் ஐம்புலனை அடக்கி பலனில்லை.

90. தாயின் உயிரே தம்உயிர் என்று அறிவான்.

91. பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆவான்.

92. பக்திசெலுத்துவதே அகத்தீசனர் திருவடியாம்.

93. பக்தி செலுத்தசெலுத்த பாவங்கள் பொடியாகும்.

94. பக்தி செலுத்தசெலுத்த பண்புகள் ஓங்கும்.

95. பக்தி செலுத்தசெலுத்த பரவசம் அடையலாம்.

96. பக்தி செலுத்தசெலுத்த பாவபுண்ணியம் அறியலாம்.

97. பக்தி செலுத்தசெலுத்த பண்பு ஈதென்று அறியலாம்.

98. பக்தி செலுத்தசெலுத்த பரிவுடன் வாழலாம்.

99. பக்தி செலுத்தசெலுத்த பிறருக்கு பரவசம் ஊட்டலாம்.

100. பக்தி செலுத்தசெலுத்த பாசம் என்பது உடம்பு என்று அறியலாம்.

101. பக்தி செலுத்தசெலுத்த பசு என்பது உயிர் என்று அறியலாம்.

102. பக்தி செலுத்தசெலுத்த பதியாகிய சுழிமுனையை அறியலாம்.

103. பக்தி செலுத்தசெலுத்த பசு பாசத்தை பதியுள் சேர்க்கலாம்.

104. பக்தி செலுத்தசெலுத்த பணிவுடன் வாழலாம்.

105. பக்தி செலுத்தசெலுத்த பகையை வெல்லலாம்.

106. பக்தி செலுத்தசெலுத்த பண்புடன் வாழலாம்.

107. பக்தி செலுத்தசெலுத்த பகைமையை நீக்கலாம்.

108. பக்தி செலுத்தசெலுத்த பாவத்தை போக்கலாம்.

109. பக்தி செலுத்தசெலுத்த பக்குவம் உண்டாகும்.

110. பக்தி செலுத்தசெலுத்த இடம்பாச்சாரம் நீங்கும்.

111. பக்தி செலுத்தசெலுத்த வீண் ஆரவாரம் செய்யார்.

112. பக்தி செலுத்தசெலுத்த பிறரை மதித்து வாழ்வார்.

113. பக்தி செலுத்தசெலுத்த மன்னிக்கும் குணம் உண்டாகும்.

114. பக்தி செலுத்தசெலுத்த பழிவாங்கும் உணர்ச்சி நீங்கும்.

115. பக்தி செலுத்தசெலுத்த பரோபகாரி ஆகலாம்.

116. பக்தி செலுத்தசெலுத்த நன்மனம் ஓங்கும்.

117. பக்தி செலுத்தசெலுத்த வன்மனம் நீங்கும்.

118. பக்தி செலுத்தசெலுத்த சிறப்பறிவு ஓங்கும்.

119. பக்தி செலுத்தசெலுத்த ஆன்மாவை அறியலாம்.

120. பக்தி செலுத்தசெலுத்த பாசத்தை அறியலாம்.

121. பக்தி செலுத்தசெலுத்த பாசத்தை போக்கலாம்.

122. அகரம் உகரம் அறிவதே சிறப்பறிவு ஆகும்.

123. அகரம் உகரம் அறிவதே அறிவுடைமை ஆகும்.

124. அகரம் உகரம் அறிந்தவன் அன்புடையவன் ஆவான்.

125. அகரம் உகரம் அறிந்தவன் மும்மலத்தை வெல்வான்.

126. அகரம் உகரம் அறிந்தவன் ஆசையை அறுப்பான்.

127. அகரம் உகரம் அறிந்தவன் ஐம்புலனை அடக்குவான்.

128. அகரம் உகரம் அறிந்தவன் ஐம்புலனை அறிவான்.

129. அகரம் உகரம் அறிந்தவன் கடவுளாவான்.

130. அகரம் உகரம் அறிந்தவன் சுத்தம் அசுத்தம் அறிவான்.

131. அகரம் உகரம் அறிந்தவன் தூல–சூட்சமம் அறிவான்.

132. அகரம் உகரம் அறிந்தவன் ஆன்மாவை அறிவான்.

133. அகரம் உகரம் அறிந்தவன் அனைத்தும் அறிந்தவன் ஆவான்.

134. அகரம் உகரம் அறிந்தவன் வித்தினுள் வித்தை அறிவான்.

135. அகரம் உகரம் அறிந்தவன் இறந்தாரை எழுப்புவான்.

136. அகரம் உகரம் அறிந்தவன் பிரம்மம் ஆவான்.

137. அகரம் உகரம் அறிந்தவன் ஈசன் ஆவான்.

138. அகரம் உகரம் அறிந்தவன் தொண்டர் வினையை தீர்ப்பான்.

139. அகரம் உகரம் அறிந்தவன் இனியன் ஆவான்.

140. அகரம் உகரம் அறிந்தவன் சினத்தை வெல்லுவான்.

141. அகரம் உகரம் அறிந்தவன் கசடை அறுப்பான்.

142. அகரம் உகரம் அறிந்தவன் ஆற்றல் உள்ளவன் ஆவான்.

143. அகரம் உகரம் அறிந்தவன் ஐந்தொழிலை செய்வான்.

144. அகரம் உகரம் அறிந்தவன் முதுமையை வெல்லுவான்.

145. அகரம் உகரம் அறிந்தவன் கோடியுகம் வாழ்வான்.

146. அகரம் உகரம் அறிந்தவன் நல்வினை – தீவினை அறிவான்.

147. அகரம் உகரம் அறிந்தவன் பாசத்தைப்போக்குவான்.

148. அகரம் உகரம் அறிந்தவன் அடக்கமாக இருப்பான்.

149. அகரம் உகரம் அறிந்தவன் அதிமூடன் ஆவான்.

150. முருகா என்றால் முன்நின்று அருள்வான்.

151. ஆறுமுகப் பெருமான் என்றால் அஞ்சேல் என்பான்.

152. உண்மைப்பொருளை அறிய தமிழைக் கற்க வேண்டும்.

153. உண்மை பக்தியே உயர்த்தும் உன்னை.

154. அகரம் உகரத்தை அறிவதே சிறப்பதாகும்.

155. அகரம் உகரமே ஆயுள் பெருக்கமாகும்.

156. அகரம் உகரமே அனாதியை அறியலாம்.

157. அகரம் உகரத்தால் பிரம்மத்தை அறியலாம்.

158. அகரம் உகரமே நாத விந்துவாகும்.

159. அகரம் உகரமே பாவத்தை பொடியாக்கும்.

160. அகரம் உகரமே ஆண்மையை தந்திடும்.

161. அகரம் உகரம் அறிந்தால் அனைத்தும் வெற்றியே.

162. அகரம் உகரத்தை அறிந்தவர் ஞானியாவார்.

163. அகரம் உகரத்தை அறிந்தவர் புண்ணியவான் ஆவார்.

164. அகரம் உகரம் அறிந்தவர் அன்பரை தேற்றுவார்.

165. அகரம் உகரம் அறிந்தவர் தன்னை அர்ப்பணிப்பார்.

166. அகரம் உகரம் அறிந்தவர் அனைத்தும் உணர்ந்தவர்.

167. அகரம் உகரம் அறிந்தவர் அனைத்து மொழி கற்றவர்.

168. அகரம் உகரம் அறிந்தவர் அனைத்து இலக்கணமும் அறிந்தவர்.

169. அகரம் உகரம் அறிந்தவர் இருவினை கடந்து நிற்பார்.

170. அகரம் உகரம் அறிந்தவர் ஐம்பூதம் அறிவார்.

171. அகரம் உகரம் அறிந்தவர் ஐம்பூதத்தையும் அடக்குவார்.

172. அகரம் உகரம் அறிந்தவர் ஐம்புலனை அறிவார்.

173. அகரம் உகரம் அறிந்தவர் பரமான்மாவை அறிவார்.

174. அகரம் உகரம் அறிந்தவர் களிம்பை (அழுக்கு) அறிவார்.

175. அகரம் உகரம் அறிந்தவர் பிறர் களிம்பை (அழுக்கு) நீக்குவார்.

176. அகரம் உகரம் அறிந்தவர் அன்பருக்கு அன்பர் ஆவார்.

177. அகரம் உகரம் அறிந்தவர் அகந்தை அற்று இருப்பார்.

178. அகரம் உகரம் அறிந்தவர் சுயுநலம் இல்லாதவர்.

179. அகரம் உகரம் அறிந்தவர் ஆசை இல்லாதவர்.

180. அகரம் உகரம் அறிந்தவர் அழுக்காறு இல்லாதவர்.

181. அகரம் உகரம் அறிந்தவர் சினத்தை அடக்குவார்.

182. அகரம் உகரம் அறிந்தவர் அணுவை அறிவார்.

183. அகரம் உகரம் அறிந்தவர் அண்டத்தை பார்ப்பார்.

184. அகரம் உகரம் அறிந்தவர் பிண்டத்தை பார்ப்பார்.

185. அகரம் உகரம் அறிந்தவர் தத்துவத்தை அறிவார்.

186. அகரம் உகரம் அறிந்தவர் தத்துவத்தை அடக்குவார்.

187. அகரம் உகரம் அறிந்தவர் ஆண் பெண்ணை அறிவார்.

188. அகரம் உகரம் அறிந்தவர்க்கு கற்பக விருட்சம் கைவசமாகும்.

189. அகரம் உகரம் அறிந்தவர் சங்கநிதி பத்மநிதி ஏவல் செய்யும்.

190. அகரம் உகரம் அறிந்தால் தூல சூட்சமத்தை சேர்த்து வேதியியல் செய்யலாம்.

191. அகரம் உகரம் அறிந்தால் ஜீவான்மாவை பரமான்மாவோடு சேர்க்கலாம்.

192. அகரம் உகரம் அறிந்தால் ஓதாது உணரலாம்.

193. அகரம் உகரம் அறிந்தவர் கதிரொளி காணலாம்.

194. அகரம் உகரம் அறிந்தால் பரபிரம்மம் அறியலாம்.

195. அகரம் உகரம் அறிந்தால் அதுவே பிரம்மமாம்.

196. அகரம் உகரம் அறிந்தவர் தூல சூட்சமம் அறியலாம்.

197. அகரம் உகரம் அறிந்தால் கோடியுகம் வாழலாம்.

198. அகரம் உகரம் அறிந்தவர் அட்சரம் ஐம்பத்தொன்றையும் அறியலாம்.

199. அகரம் உகரம் அறிந்தால் கூற்றுவனை வெல்லலாம்.

200. அகரம் உகரம் அறிந்தால் நடுவணை (சுழிமுனை) அறியலாம்.

201. அகரம் உகரம் அறிந்தால் தசநாதம் கேட்கலாம்.

202. அகரம் உகரம் அறிந்தால் ஐவண்ணம் காணலாம்.

203. அகரம் உகரம் அறிந்தால் அமிழ்தம் உண்ணலாம்.

204. அகரம் உகரம் அறிந்தால் மும்மலம் அறியலாம்.

205. அகரம் உகரம் அறிந்தால் மும்மலம் அற்றுப்போகும்.

206. அகரம் உகரம் அறிந்தால் ஆசையும் அற்றுப்போகும்.
207. அகரம் உகரம் அறிந்தால் ஆணவம் அற்றுப்போகும்.
208. அகரம் உகரம் அறிந்தால் ஆன்மாவிற்கு ஆக்கமாகும்.
209. அகரம் உகரம் அறிந்தால் அறிவை கொண்டு அறிவை அறியலாம்.
210. அகரம் உகரம் அறிந்தால் அண்ட சராசரம் அறியலாம்.
211. அகரம் உகரம் அறிந்தால் அட்டதிக்கும் வசியமாகும்.
212. அகரம் உகரம் அறிந்தால் அமட்டதிக்கும் ஆளலாம்.
213. அகரம் உகரம் அறிந்தால் அணுவில் அணு ஆகலாம்.
214. அகரம் உகரம் அறிந்தால் அணுவை அண்டமாக்கலாம்.
215. அகரம் உகரம் அறிந்தால் ஆணை பெண்ணாக்கலாம்.
216. அகரம் உகரம் அறிந்தால் ஆறு ஆதாரம் அறியலாம்.
217. அகரம் உகரம் அறிந்தால் ஆகாதது ஒன்றுமில்லை.
218. அகரம் உகரம் அறிந்தால் வினையும் சேராது(மிகாது).
219. அகரம் உகரம் அறிந்தால் வினையும் அண்டாது(நெருங்காது).
220. அகரம் உகரம் அறிந்தால் வினைதான் பிறவிக்கு காரணம் என்று அறியலாம்.
221. அகரம் உகரம் அறிந்தால் சூட்சமத்தை அறியலாம்.
222. அகரம் உகரம் அறிந்தால் சூட்சா சூட்சமம் அறியலாம்.
223. அகரம் உகரம் அறிந்தால் உடற்பிணி உயிர்பிணி நீக்கலாம்.
224. அகரம் உகரம் அறிந்தால் ஔடதம்(மருந்து) அறியலாம்.
225. அகரம் உகரம் அறிந்தால் அறசிந்தை விளங்குமாம்.
226. அகரம் உகரம் அறிந்தால் அனைத்து உயிர்க்கும் நன்மையாம்.
227. அகரம் உகரம் அறிந்தால் சமாதியை அறியலாம்.
228. அகரம் உகரம் அறிந்தால் அதுவே(இயற்கை) நாம் ஆகலாம்.
229. அகரம் உகரம் அறிந்தால் நாமே அது(இயற்கை) என்று அறியலாம்.
230. அகரம் உகரம் அறிந்தால் பிறப்பை அறுக்கலாம்.
231. அகரம் உகரம் அறிந்தால் காமத்தை வெல்லலாம்.
232. அகரம் உகரம் அறிந்தால் அறியாமை நீங்கிப்போம்.

233. அகரம் உகரம் அறிந்தால் அட்டமா சித்து கைவசமாகும்.
234. அகரம் உகரம் அறிந்தால் அண்டகோடிகளும் சனத்தில் சென்று வரலாம்.
235. அகரம் உகரம் அறிந்தால் அனைத்துலகத்தையும் இங்கிருந்தே காணலாம்.
236. அகரம் உகரம் அறிந்தால் அன்பருக்கு அன்பர் ஆகலாம்.
237. அகரம் உகரம் அறிந்தால் கூடுவிட்டு கூடு பாயலாம்.
238. அகரம் உகரம் அறிந்தால் பலகோடி அண்டங்களை இங்கிருந்து காணலாம்.
239. அகரம் உகரம் அறிந்தால் அன்பர் குறை தீர்க்கலாம்.
240. அகரம் உகரம் அறிந்தால் பரமானந்தம் கொள்ளலாம்.
241. அகரம் உகரம் அறிந்தால் பரன் நடனம் காணலாம்.
242. அகரம் உகரம் அறிந்தால் பக்குவங்கள் உண்டாகுமாம்.
243. அகரம் உகரம் அறிந்தால் அறுசுவையை அடக்கலாம்.
244. அகரம் உகரம் அறிந்தால் பசியற்று இருக்கலாம்.
245. அகரம் உகரம் அறிந்தால் இராப்பகலற்று இருக்கலாம்.
246. அகரம் உகரம் அறிவதே சாகா கல்வியாம்.
247. அகரம் உகரம் அறிவதே அறிவினுள் அறிவாம்.
248. அகரம் உகரம் அறிவதே அடக்கத்துள் அடக்கமாம்.
249. அகரம் உகரம் அறிவதே மோனநிலை ஆகுமாம்.
250. அகரம் உகரம் அறிவதே அசைவற்ற சிந்தையாம்.
251. அகரம் உகரம் அறிவதே அட்டமா சித்தியாம்.
252. அகரம் உகரம் அறிவதே பக்தியின் சித்தியுமாம்.
253. அகரம் உகரம் அறிவதே பக்தி சித்தி முக்தியாம்.
254. அகரம் உகரம் அறிந்தவனே வாசியை அறிந்தவனாம்.
255. அகரம் உகரம் அறிந்தவனே ஆசான் அருள் பெற்றவன்.
256. அகரம் உகரம் அறிந்தவனே அன்புணர்ச்சி மிக்கவன்.
257. அகரம் உகரம் அறிந்தவனே அறனாக்கம் பெற்றவன்.
258. அகரம் உகரம் அறிந்தவனே மனோலயப்பட்டவன்.
259. அகரம் உகரம் என்பதே இடைபின் சுழினையாம்.
260. அகரம் உகரம் அறிவதே சாயுட்சியமாம்.
261. அகரம் உகரம் அறிவதே விண்ணின் மண்ணின் மிக்கதாம்.
262. அகரம் உகரம் அறிந்தால் ஆண்மையுற்று இருக்கலாம்.

263. அகரம் உகரம் அறிந்தால் அன்பர் வினை தீர்க்கலாம்.
264. அகரம் உகரம் அறிந்தால் உண்மை பொய்யை அறியலாம்.
265. அகரம் உகரம் அறிந்தால் வித்துநிலை அறியலாம்.
266. அகரம் உகரம் அறிந்தால் வித்தினுள் வித்து அறியலாம்.
267. அகரம் உகரம் அறிந்தவன் ஆசானை ஈசன் என்று அறிவான்.
268. அகரம் உகரம் அறிந்தவனே ஆசானை அறிந்தவனாம்.
269. அகரம் உகரம் அறிந்தவனே ஆசானை காண்பானாவான்.
270. அகரம் உகரம் அறிந்தவனே அகிலத்தை ஆளுவான்.
271. அகரம் உகரம் அறிந்தால் காமம் அற்றுவிடும்.
272. அகரம் உகரம் அறிந்தால் வஞ்சனை அற்றுவிடும்.
273. அகரம் உகரம் அறிந்தால் வன்சொற்கள் பேசார்.
274. அகரம் உகரம் அறிந்தால் குணக்கேடுகள் நீங்கும்.
275. அகரம் உகரம் அறிந்தால் உபசாந்தம் உண்டாகும்.
276. அகரம் உகரம் அறிந்தவர் இருவினை கடந்து நிற்பார்.
277. அகரம் உகரம் அறிந்தால் ஊனினை உருக்கும் உபாயம் அறியலாம்.
278. அகரம் உகரம் அறிந்தால் கார சாரத்தால் தேகம் கனகம்(தங்கம்) ஆக்கலாம் என்பதை அறியலாம்.
279. ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி என்று நாமஜெபம் செய்வதே தவமாகும்.
280. உயிர்ப்பலி கொடாத பூஜையே உண்மையான பூஜையாகும்.
281. மனிதநேயம் இல்லா ஆன்மீகம் மயானத்திற்க ஒப்பானது.
282. உயிரை அறிந்தவன் உடம்பை அறிவான்.
283. ஜீவாத்மாவை அறிந்தவன் பரமாத்மாவை அறிவான்.
284. குணக்கேட்டை அறிந்தவனே குணப் பண்பாளன் ஆவான்.
285. நாமே அதுவென்று அறிந்தவன், அதுவே நாம் என்று அறிவான்.
286. பொருளின் தன்மையறிந்தவன் புண்ணியவான் ஆவான்.
287. உண்மைபொருள் அறியாதவனே உயிரில்லாதவன் ஆவான்.
288. இச்சை (ஆசை) உள்ளவனே அச்சமுடன் வாழ்வான்.
289. சாக்காட்டை வென்றவனே சமத்தனாவான்.

290. சந்நியாசம் செய்வதிலும் மூடர் உண்டு, சம்சாரம் செய்வதிலும் ஞானி உண்டு.

291. பிறருக்கு செய்யும உதவியே நமக்கு செய்துகொள்ளும் நன்மையாகும்.

292. உள்ளத் தூய்மையே சொல்லின் தூய்மையாகும்.

293. பூஜை என்பதே புண்ணியமாகும்.

294. உண்மை என்பதே அகத்தீசன் ஆகும்.

295. மோட்சம் என்பதே அகத்தீசன் ஆகும்.

296. பொறாமை இல்லாமையே புண்ணியமாகும்.

297. கோபம் உள்ளவன் பாவியாவான்.

298. புலனை வென்றவனே வீரனாவான்.

299. காசாசை உள்ளவனுக்கு ஞானம் இல்லை. ஞானம் உள்ளவனுக்கு காசாசை இல்லை.

300. அன்பு பொருந்தி வாழ அகத்தீசா என்று கூறுங்கள்.

301. ஆக்கம் பெற்றுவாழ அகத்தீசா என்று கூறுங்கள்.

302. இல்லறம் சிறக்க அகத்தீசா என்று கூறுங்கள்.

303. ஈகை குணம்பெற அகத்தீசா என்று கூறுங்கள்.

304. உண்மைப்பொருள் அறிய அகத்தீசா என்று கூறுங்கள்.

305. ஊழைப்போக்கிட அகத்தீசா என்று கூறுங்கள்.

306. எண்ணம் சித்திக்க அகத்தீசா என்று கூறுங்கள்.

307. ஏற்றம் பெற்றிட அகத்தீசா என்று கூறுங்கள்.

308. ஐயம் நீங்கிட அகத்தீசா என்று கூறுங்கள்.

309. ஒண்பொருள் அறிந்திட அகத்தீசா என்று கூறுங்கள்.

310. ஓங்காரம் கண்டிட அகத்தீசா என்று கூறுங்கள்.

311. ஔடதம் அறிந்திட அகத்தீசா என்று கூறுங்கள்.

312. எல்லாம்வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய கடவுள் உனக்கு உடம்பையும் உயிரையும் கொடுத்திருக்கிறார். கொடுக்கப்பட்ட உயிரையும் உடம்பையும் துணைகொண்டு கடவுளால் படைக்கப்பட்ட உயிர்களுக்கு நன்மை செய்தால் கடவுளுக்கு நீ செய்யும் கைமாறாகும். அப்படிச் செய்யாது, உயிரினங்களுக்கு இடையூறு செய்தால் அது கடவுளுக்கு நீ செய்யும் இடையூறாகும்.

313. உயிானங்களுக்கு நீ செய்யும் தொண்டே கடவுள் தொண்டாகும்.

314. நீ மற்றவர்கள் உன்னிடம் அன்பாக நடந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிறாய். நீ

மற்றவர்கிளடம் அன்பாக நடந்துகொள்ள வேண்டுமென்று ஏன் உனக்குத் தெரியவில்லை.

315. நீ மற்றவர்கள் உன்னிடம் இனிமையாகப் பேசவேண்டும் என்று விரும்புகிறாய். நீ மற்றவர்களிடம் கடுமையாகப் பேசுவது என்ற நியாயம்?

316. நீ மற்றவர்கள் குற்றங்களை நுட்பமாய் ஆராய்ந்து கணக்கிடுகின்றாய். உன் குற்றங்களைப் பற்றி கடுகளவும் அறியமுடியவில்லையே, என்ன நியாயம்?

317. பிறரை கண்ணீர் விடச் செய்தவன்தான் கண்ணீர் விடுவான். பிறரை மகிழச் செய்தவன்தான் மகிழ்ந்து இருப்பான்.

318. பொருள் பற்று இருந்தால் அங்கே அருள் இருக்காது.

319. தூலதேகம் அறிந்தால் சூட்சும தேகம் அறியலாம்.

## குருநாதர் தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள் அருளிய உபதேசம்

**அகாரம் என்பது புருவமத்தியாகிய சுழிமுனையில் ஒடுங்கின்ற காற்றாகும். உகாரமாவது கண்டஸ்தானத்தில் ஒடுங்கின்ற காற்றாகும். ஆசான் ஞானபண்டிதராகிய சுப்ரமணியர் ஆசி இல்லாமல் அகாரம் உகாரத்தை அறியமுடியாது.**

ஆசான் ஞானப்பண்டிதராகயி சுப்ரமணியர் ஆசிபெறவேண்டுமென்றால் தாய் தந்தை செய்த உதவிக்கு நன்றி உள்ளவர்களாக நடந்துகொள்ளவேண்டும். தன்னை நம்பி வந்த மனைவியை அவள் மனம் மகிழும்படி நடந்துகொள்ளவேண்டும் மற்றும் உடன்பிறந்தவர்களுக்கு பாதுகாவலாக இருக்கவேண்டும். பிறர் செய்த உதவியை நன்றி மறக்ககூடாது. ஒருவரிடம் வேலை வாங்கும்போது நியாயமான கூலி கொடுக்கவேண்டும். ஒரு பொருள் வாங்கும்பொழுது நியாயமான விலை கொடுத்து வாங்கவேண்டும். ஒருபொருள் விற்கும்பொழுது நியாயமான விலைக்கு விற்கவேண்டும். விருந்தை உபசரிக்கவேண்டும். நலிந்தவர்க்கு முடிந்தளவு அன்னதானம் செய்யவேண்டும். பொருள் சேர்க்கும்பொழுது நீதிக்கு உட்பட்டு பொருள் சேர்க்கவேண்டும்.

மேலும் தினமும் காலை 5.00 மணிக்கு எழுந்து காலைக்கடன் முடித்துவிட்டு ஒரு வெண்ணிறத் துணியில் அமர்ந்து **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று காலையில் 30 நிமிடமும், மாலையில் 30 நிமிடமும் நாம ஜெபமாகிய பூஜை செய்யவேண்டும். முடிந்தால் இரவிலும் செய்யலாம். தினமும் படுக்கும்பொழுது ஆசான் அகத்தீசர் நாமத்தை சொல்லித்தான் படுக்கவேண்டும். காலையில் எழுந்தவுடன் **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று நாமத்தை சொல்லிவிட்டுத்தான் படுக்கையைவிட்டு எழவேண்டும். உடனே சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கிவிட்டு தான் காலைக்கடன் முடிக்கவேண்டும்.

மேலும் பெண்உறவு கொள்ளும் நேரத்தில் இருவரும் பத்து நிமிடம் **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் செய்துவிட்டு பெண் உறவு கொண்டால் பண்புள்ள புத்திரப்பாக்கியம் தோன்றும். பெண் உறவுகொள்ளும்போது வலது பக்கமாகிய சூரியகலையில் சுவாசம் இயங்கினால் ஆண் குழந்தை பிறக்கும். இடது பக்கமாகிய சந்திரகலையில் சுவாசம் இயங்கினால் பெண் குழந்தை பிறக்கும்.

மேலும் தொடர்ந்து ஆசான் அகத்தீசரை பூஜை செய்துவந்தால் முன்செய்த பாவங்கள் தீரும். செல்வம் பெருகும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தெளிந்த அறிவும், ஆழ்ந்து சிந்திக்ககூடிய சிறப்பறிவும் உண்டாகும். மேலும் நீடிய ஆயுளும் உண்டாகும். உண்மைப் பொருளை அறியக்கூடிய சிறப்பறிவும் உண்டாகும்.

பக்திநிலை உயர உயர ஆசான் அகத்தீசர் நம்மை சார்ந்து இடகலையாகிய சந்திரகலையையும், பின்கலையாகிய சூரியகலையையும் சேர்த்து, ரேசித்து, பூரித்து, கும்பித்து புருவமத்தியில் ஸ்தம்பிப்பார். அவர் வாசி என்னும் மூச்சுக்காற்றில் கலந்து புருவமத்தியில் ஒடுங்கிவிடுவார். அவர் மூலாதாரத்தில் தங்கி உடம்பில் உள்ள காமம் என்ற களிம்பை நீக்கி சூட்சமதேகமாகிய ஒளிஉடம்பை ஆக்கம் பெறச் செய்வார். ஆக்கம் பெற்றவர்தான் அகரம் உகரத்தை அறிந்தவராவார். அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்யும் வல்லவர் ஆவார். இதை அனைத்தும் பெறவேண்டுமென்றால் புண்ணயும், பக்தியாலுமன்றி வேறு எவ்வித சடங்குகளாலும் கடுகளவும் பயனில்லை என்பது சத்தியமாகும்.

குறிப்பு : தக்க ஆசான் உபதேசிக்காமல் பிராணாயாமம் செய்வது நல்லதல்ல.

அருள்மணக்கும் அருள்வள்ளல்

**மகான் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய**

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
மைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணி தன்தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி

விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்நிறைந்து எல்லையிலாதானே! நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிக்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்!
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா!
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!

கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்துடையயாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்

புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவில்லாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்னிருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்

நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும் எம்காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றின்ப வெள்ளமே! அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே! உடையானே!

வேற்று விகாரவிடக் குடம்பினுட் கிடப்ப
ஆற்றேன்! எம் ஐயா! அரனே! ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லற் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## அணுவினுள் அணுவைக்கண்ட ஔவையார் அருளிய
## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே

முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயா பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றில் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

திருமூலர் மனமுவந்து அருளிய அருட்கவி

**என்னவே நீயழைக்க வெனக்குமுன்னே**
**எதிரேறி முன்வருவா ளாத்தாள்வாலை**
**சொன்னபே ரறிந்துநன்றா யழைத்துப்பாரு**
**சூட்சமிதை யுனக்காகச் சொன்னோமப்பா**
**இன்னயே ரின்னகுறி யெண்ண வேண்டாம்**
**ஏகமா யறிந்திருப்போ மப்போ நாமும்**
**முன்னமே யழைக்கையிலே மூமூவென்றால்**
**முத்திதரு வாலைபதஞ் சித்தியாமே.**

**திருமூலர் ஞானம் 84–ல் கவி 82.**

ஆசான் திருமூலர் சமாதியாகும் காலத்தில் தம்முடைய அன்புச்சீடர்கள் கண்ணீர்விட்டு கதறினார்கள். கதறி அழுகின்ற தொண்டர்களிடம் பயப்படாதீர்கள்! எந்த நேரத்திலும் திருமூலதேவா! என்று அழைத்தாலும், அக்கணமே உங்கள்முன் தோன்றி உங்களுக்கு உள்ள குறைகளை நீக்கியும், ஞானமும் சித்திக்க அருள்செய்வோம். என்னை அழைத்தாலும், என் சீடர்களாகிய காலாங்கிநாதர், போகநாதர், கொங்கணர், கருவூர் முனிவர், கமலமுனி, ரோமரிஷி இன்னும் அநேகர் உள்ளனர் அவர்களை அழைத்தாலும் உங்கள் முன் தோன்றி **அஞ்சேல்** என்று அருள் செய்வார்கள். எனது ஆசானாகிய அகத்தீசரையோ, நந்தீசரையோ அழைத்தாலும் அல்லது என்னை அழைத்தாலும் அல்லது எனது சீடர்களை அழைத்தாலும் அல்லது எங்கள் வர்க்கமாகிய ஞானிகள் பெயரை சொல்லி யாரை அழைத்தாலும், அக்கணமே தோன்றி உங்களுக்கு அருள் செய்வார்கள். இந்த சூட்சுமத்தை (இரகசியத்தை) உங்கள்பால் கருணைகொண்டு சொல்லியிருக்கிறேன். பிழைத்துக்கொள்ளுங்கள் பிள்ளைகளே! என்று கருணையுடன் அருளியுள்ளார்கள்.

முற்றுபெற்ற ஞானிகளை யாரை அழைத்தாலும், எல்லா ஞானிகளுமக்கும் தெரியும். ஆகவே, ஞானிகளில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதம் இல்லை. அத்ததை பேரும் மிக்க அருள்பலமும், புண்ணியபலமும் உள்ளவர்கள். மிகப்பெரிய வல்லமையும் உள்ளவர்கள். **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று சொன்னாலும் எல்லா ஞானிகளுக்கும் தெரியும். **ஓம் திருமூலதேவர் திருவடிகள்** போற்றி என்று சொன்னாலும்

எல்லா ஞானிகளுக்கும் தெரியும். எனவே ஆதி தலைவன் ஞானபண்டிதரும், அவர் ஆசிபெற்ற அகத்தீசரும் மற்றும் எல்லா ஞானிகளும் ஒரே தன்மையானவரே பேதமில்லை.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் பிற வெளியீடுகள்

01. சித்தர்களன் போற்றித் தொகுப்பு.
02. ஞானிகள் அருளிய தினசரி பாராயணநூல்.
03. ஓங்காரக்குடிலாசான் – அனுபவ விளக்கப் – பத்திரிக்கைகள்.
04. ஞானிகள் அருளி குருநாதரின் பூர்வஜென்ம வரலாறு.
05. பிரம்மமுனிவர் அருளிய கலிகால மாற்றங்கள்.
06. ஞானிகள் அருளிய நெறிமுறைகள்.
07. பசுவதை செய்தால் பருவமழை தவறும்.
08. சன்மார்க்க நெறிமுறைத் திருமண விளக்கம்.
09. துன்பங்கள் தீர ஓங்காரக்குடிலுக்கு வாருங்கள்.
10. சுகமான வாசியே அகத்தீசராகும்.
11. தவநூல்.
12. ஞானிகள் தம்சுவடிமூலம் அருளிய அருள்வாக்கு.